

உங்கள் உணவுக் கவலை தீர்ந்தது!



நன்றாக பரிசோதனை செய்து பார்த்ததில் நம்முடைய உணவு தேகாரோக்யத்திற்கு தேவையான சத்துப்பொருள்கள் குறைந்ததாகவே இருக்கின்றது.

சமீபத்தில் நடத்தப்பட்ட போஷிப்பு உணவு ஆராய்ச்சிகளில் நமது தேகாரோக்ய உணவுகளில் உடலை வளர்க்கும் புரோடீன், சத்து நிறைந்த விட்டமின், பலம்தரும் கொழுப்பு, கார்போஹைட்ரேட்ஸ் முதலியவைகளை நமது உணவோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியுள்ளார்கள். தற்காலத்து நிபுணர்கள் நமது உணவின் குறைபாடுகளை நிறைந்த போஷிப்புகளைச் சேர்த்து சரிசெய்து கொள்ளலாம் என்று கண்டுபிடித்துள்ளார்கள். அதாவது புரோடீன், விட்டமின் உலோக சத்துக்கள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட உணவுகளைக்கொண்டு சரிசெய்து கொள்ளலாம்.

மெக்லெக் கம்பெனியார் இப்படிப்பட்ட போஷிப்பு உணவுகளை குழந்தைகள், பெண்கள், ஆண்கள் முதலிய சகலருக்கும் தேகாரோக்யத்தை அளிக்கும் படியாக முதன்முதலாக செய்துள்ளார்கள். இவர்களின் போஷிப்பு உணவுகளை ஆராய்ந்தறிந்த நிபுணர்கள் நம்முடைய உணவுகளின் குறைபாடுகளுக்கு முற்றிலும் ஏற்றவை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

மெக்லெக் புரோடீன் ஃபுட்: வளர்பவர்களுக்கு உடம்பை வளர்க்கும் சத்துள்ள புரோடீன் சாரம் கொண்டது.

மெக்லெக் சிக்ரேன் ஃபுட்: குழந்தைகளின் உணவில் புரோடீன் குறைபாடுகளை நீக்கி போஷிக்கும் சாரம் கொண்டது.

மெக்லெவிட்டன்: விட்டமின் சத்துக்கள் உலோக சத்துக்களைச் சாரமாகக்கொண்டு வளர்பவர்களுக்கு உணவுக் குறைகளை நீக்கி புஷ்டியை அளிப்பது.

சீரம் கால் மீடல்: விட்டமின் சத்துக்களும் உலோகச் சத்தும் நிறைந்தது. குழந்தைகளுக்கு ஏற்றது.

பொலிஜென் அல் பெப்டோஜென்: ரோகமடைந்தபான சிகிச்சை பெறுபவர்களுக்கு ஏற்ற உணவு.

விவரங்கள் கொண்ட புத்தகம் வேண்டுவோர் குறித்து இதனை அனுப்பவும். ...



மெக்லெக்
நியூட்ரிமெண்ட்ஸ்

உணவில் குறையாய் உள்ள உணவுச்சத்துக்களை அளிப்பவை.

தி மெக்லெக் நியூட்ரிமெண்ட்ஸ் அண்ட் பார்மஸூடிகல்ஸ் லிமிடெட்
99-A, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. மதராஸ்

MNP 43 Tamil

கல்கி
பொருளடக்கம்

மலர் 6 | இதழ் 46 — 1947 ஜூன் 15 — சர்வஜித் ஆனி 1

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

தற்கால மாகாண அரசியலில், குறிப்பிட்ட ஒரு மந்திரி எந்த முக்கியமான காரியத்தையும் தம் விருப்பப்படி செய்துவிட முடியாது. மந்திரி சபை முழுதும் சேர்ந்துதான் தீர்மானிக்க வேண்டும். அந்தந்த இலாகா மந்திரி ஆற்றலுள்ளவரா யிருந்தால் தமது இலாகாவில் நடக்க வேண்டிய காரியத்துக்காகப் போராடிச் சாதிக்கலாம்.

சென்ற மந்திரி சபையில் கல்வி மந்திரி ஸ்ரீ அவிநாசிலிங்கம் ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்காக எவ்வளவோ போராடினார். ஓட்டு எடுத்தே தீரவேண்டுமென்று வற்புறுத்தினார். இந்தப் புது மந்திரி சபையிலும் மேற்படி போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார். சென்ற மந்திரி சபையைக் காட்டிலும் புது மந்திரி சபையார், ஆசிரியர் நிலைமையில் அதிக கருணை காட்டிச் சம்பளம் முதலியவற்றில் சொற்ப அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். ஆசிரியர் குறைகள் எல்லாம் தீர்ந்துவிடவில்லை யென்றாலும், அவர்களுக்குக் குறைகள் இருக்கின்றன என்பதைச் சர்க்கார் ஒப்புக்கொண்டதே பெரிய காரியம். ஆசிரியர் நிலைமையில் ஓரளவு முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவு அபிவிருத்தியாவது ஏற்பட்டதற்கு நமது கல்வி மந்திரியின் பிடிவாதப் பிரயத்தனமே காரணமாகும்.



ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் தமக்கென வாழாமல் பிறர்க்கெனவே வாழ்க்கையை அர்ப்பணம் செய்துள்ள இந்தத் தொண்டர் கூட்டத்தில் ஒருவர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் பரம குருவாகக் கொண்டவர். இறைவன் அருளைத் தவிர வேறு செல்வத்தை மதியாதவர்; தொண்டு செய்வதற்கென்றே அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டவர். தொண்டு செய்வதற்கு இடையூறாகுமென்றே இல்லற வாழ்க்கையை வெறுத்துப் பிரம்மசரியத்தைக் கடைப் பிடித்து வருபவர். சன்மார்க்க சீலர். எடுத்த காரியத்தை இடைவிடாத ஊக்கத்துடன் செய்யும் ஆற்றல் உடையவர். கல்வித் துறையில் சென்ற ஒரு வருஷ காலத்தில் ஸ்ரீ அவிநாசிலிங்கம் பல சீர்திருத்தங்களைச் செய்து வெற்றி பெற்றிருப்பதைத் தமிழ் நாடு அறிந்திருக்கிறது.

அவருடைய பெருமுயற்சியினால் கோயமுத்தூர் பெரியநாயக்கன்பாளையத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம் மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது.

கல்வித் துறையில் கல்வி மந்திரி ஸ்ரீ அவிநாசிலிங்கத்தின் தொண்டைப் பெரிதும் பாராட்டி அவருடைய படத்தை நமது இந்த இதழ் அட்டையில் வெளியிட்டிருக்கிறோம். அவரிடமிருந்து இன்னும் பல அரும்பெரும் தொண்டுகளை எதிர்பார்க்கிறோம்.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப்பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 46

என்ன சேதி?

வாழ்த்துகிறோம்!

சென்னைப் புது மந்திரிகள் தங்களுடைய மாதச் சம்பளத்தை ஆயிர ரூபாயிலிருந்து எண்ணூற்றைம்பது ரூபாயாகக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தேசமெங்கும் "சம்பளம் போதவில்லை" "பஞ்சப்படி போதவில்லை" என்ற கூக்குரல் கிளம்பும்போது, "எங்களுக்கு எதற்கு இவ்வளவு சம்பளம்? நாங்களே சம்பளத்தைக் குறைத்துக் கொள்கிறோம்" என்று நமது மந்திரிகள் மாதம் நூற்றைம்பது ரூபாய் தங்களுடைய சம்பளத்தில் குறைத்துக் கொண்டது பெரிதும் பாராட்ட வேண்டிய காரியம்.

மொத்தத்தில் 13 மந்திரிகளும் சேர்த்துக் குறைத்துக் கொண்டது ரூ. 1950 தான். மாகாண வரவு செலவில் இது ஒரு பெரிய காரியமல்ல. ஆனால் பொதுஜன மந்திரிகள் மாகாணத்தின் செல்வ நிலைமையை உத்தேசித்துச் சிக்கனம் காட்ட வேண்டிய அவசியத்தை உணர்ந்த மனோபாவந்தான் முக்கியமானது. பொறுப்பின்றி அதிகச் சம்பளக் கிளர்ச்சி செய்யும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இது ஒரு வழிகாட்டியான செய்கையல்லவா?

மந்திரிகள் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டது ஒருபுறம் இருக்க, மாஜி பிரதம மந்திரி பிரகாசம் காலத்திலே பார்லிமெண்டரி காரியதரிசிகள் என்பதாக 13 மந்திரிகளுக்கு 14 காரியதரிசிகள் வேலை பார்த்துக் கொண்டு வந்தார்கள். மேற்படி பார்லிமெண்டரி காரியதரிசிகள், தங்களுக்கு என்ன வேலை என்பது தங்களுக்கே தெரியாமல் ஏறக்குறைய பத்து மாத காலம் உத்தியோகம் பார்த்தார்கள். தாங்கள் வாங்கிய சம்பளத்துடன் மாத்திரம் நிற்காமல், அனாவசியமான பிரயாணச் செலவுகளும் செய்து பொது மக்களின் பணத்தை வீணாக்கினார்கள். புது மந்திரி சபையிலே இதுவரை பார்லிமெண்டரி காரியதரிசிகள் நியமிக்கப்படவில்லை. இனி மேலும் நியமிக்காவிட்டால் புது மந்திரி சபையைப் பொதுமக்கள் இன்னும் ஒரு மடங்கு அதிகமாக வாழ்த்துவார்கள்.

புதிய ஒப்பந்தம்

தஞ்சை ஜில்லா தென்களஞ்சியம் என்று புகழப்பட்ட ஜில்லாவாகும். ஆனால், கொஞ்ச காலமாக, நெல்லுக்குப் பதிலாக, மல்லுக்கு நிற்கும் குடியானவர் — மிராசதாரர் தகராறுகள் அந்த ஜில்லாவிலே நாளுக்கு நாள் அதிகமாக விளைந்து வந்தன. மேற்படி தகராறுகள் இப்போது ஒருவாறு சுமுகமாய் முடிந்திருப்பதாக வந்திருக்கும் செய்தி, உணவுப் பஞ்சத்தால் திண்டாடும் இம்மாகாண வாசிகளுக்குப் பெரும் திருப்தி அளிக்கும்.

மேற்படி தகராறுகளைத் தீர்த்து வைத்த பெருமையில் ஒரு பெரிய பங்கு புதிய ரெவின்யூ மந்திரி கனம் கள வெங்கடராவ் அவர்களுக்குச் சேர வேண்டும். கனம் வெங்கடராவ் ஏறக்குறைய ஒரு வார காலம் வரை தஞ்சை ஜில்லாவிலே சுற்றுப் பிரயாணம் செய்து, மிராசதாரர்களையும் குடியானவர் பிரதிநிதிகளையும் கண்டு பேசி ஒரு வகையாக ஒப்பந்தம் செய்து வைத்திருக்கிறார். இத்தகைய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு ஸ்ரீ டி. கே. சீனிவாசய்யர், ஸ்ரீ பூவராக ஐயங்கார், ஸ்ரீ ஜி. நாராயணசாமி நாயுடு முதலியவர்கள் செய்த உதவியைப் பெரிதும் பாராட்ட வேண்டும்.

சென்ற வருஷமும் இதே மாதிரி குடியானவர் — மிராசதார் தகராறுகளைத் தீர்த்து ஒப்பந்தம் செய்து வைப்பதற்கு முயற்சிகள் நடந்தன. பழைய மந்திரிகள் இருவர் தஞ்சைக்குப் போய் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தார்கள். ஆனால் காரியம் ஒன்றும் நடக்கவில்லை. இம்முறையும் அப்படி ஆகிவிடாமல் கனம் ரெவின்யூ

மந்திரி செய்து வைத்திருக்கும் ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பு குடியானவர் — மிராசுதார்கள் ஆகிய இருசாராரையும் சேரும். அவர்கள் தங்கள் சொந்தத் தகராறுகளையும் மனஸ்தாபங்களையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துக் கொண்டு, மாகாணத்தின் பொது நலத்தை முதன்மையாகக் கருதவேண்டும்.

தமிழ் நாட்டில் தஞ்சையைப் போல நீர் வளமும் நிலவளமும் மிக்கதும் நெல் நிறைய விளையக் கூடியதுமான மற்றொரு ஜில்லா திருநெல்வேலியாகும். அங்கும் இவ் வருஷம் குடியானவர் மிராசுதார் தகராறுகள் அதிகமாக இருந்து வருகின்றன. மேற்படி தகராறினால் பல நிலங்கள் தரிசாகவும் கிடக்கின்றன. கனம் ரெவின்யூ மந்திரி தஞ்சையில் குடியானவர்களுக்கும் மிராசதார்களுக்கு மிடையே சமரசம் செய்து வைத்திருப்பது போல நெல்லைக்கும் சென்று ஒரு சமரசம் ஏற்படுத்தி வைத்தால், மாகாண உணவுப் பிரச்னையைச் சமாளிக்க உதவியாக இருக்கும்.

கொசுவே, ஜாக்கிரதை!

ஒரு கொசு ரொம்பக் காலமாக ஒரு யானையைக் கடித்து அதன் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு வந்தது. யானைக்கு அது தெரியவில்லை. பெரிய மிருகம் அல்லவா? ஆனால், கெட்ட காலம், எப்படியோ ஒரு நாள் அது கொசுவைப் பார்த்துக்கொண்டது. ஆனால், ஒன்றும் செய்யவில்லை. "இனிமேல் இந்தப் பக்கம் வராதே!" என்று மாத்திரம் புத்தி சொல்லிற்று. அவ்வளவுதான்; கொசுவுக்கு வந்த கோபம் கொஞ்ச நஞ்சம் அல்ல. "உன்னுடைய இரத்தத்தைக் குடிப்பது எங்கள் உரிமை. அதற்கு இடையூறு செய்தாயோ, நூறு கொசுக்கள் அடங்கிய என்னுடைய படையைத் திரட்டிக் கொண்டுவந்து இரத்தத்தை வெள்ளமாகப் பெருக்கி உன்னைக் கொல்லப் போகிறேன்!" என்றது. இதைக் கேட்டதும் யானைக்குப் 'பக்'கென்று அவுட்டுச் சிரிப்பு ஒன்று உண்டாயிற்று. யானை அப்படி பலமாகச் சிரித்ததும் அந்தச் சிரிப்பின் ஓசையில் கொசு மூச்சுத் திணறிக் கீழே விழுந்து பிராணனை விட்டது!


ஐரோப்பாவின் ஒரு மூலையிலே சின்னஞ்சிறு கொசுவைப்போல இருக்கும் போர்ச்சுகல் சொல்லுகிறது: "இந்தியாவில் என்ன மாறுதல் ஏற்பட்டாலும் சரி, நாங்கள் மட்டும் அசைய மாட்டோம். போர்ச்சுகலுக்கு இந்தியாவில் சொந்தமாயுள்ள பிரதேசத்தை விட மாட்டோம். அது எங்கள் சொத்து. அதை ஆள்வது எங்கள் உரிமை. அதற்காக இரத்தத்தைக் கொடுத்துப் போராடவும் தயார்!"

இதைக் கேட்டு நாற்பது கோடி இந்திய மக்களுக்கும் அடக்க முடியாத அவுட்டுச் சிரிப்பு உண்டாகிறது. ஆனால் கொசுவுக்கு நேர்ந்த கதி போர்த்துகீசியர்களுக்கு ஏற்படாமல் இருப்பதற்காக இப்போதைக்கு நம்முடைய சிரிப்பை அடக்கிக் கொள்கிறோம்.

வெள்ளி மணி


தமிழ் நாட்டில் அன்று தொட்டு இன்று வரையில் இருபதினாயிரத்துச் சொச்சம் பத்திரிகைகள் தொடங்கப் பட்டிருக்கின்றன. அவற்றில் சில நின்று நிலைத்து நன்றாய் நடத்தப்பட்டு வருகின்றன. எனினும், மேற்படி இருபதினாயிரத்துச் சொச்சம் பத்திரிகைகளில், முதல் இதழிலேயே பார்த்தவர்கள் பிரமிக்கும்படியும் படித்தவர்கள் களிக்கும்படியும் வெளியான பத்திரிகை "வெள்ளி மணி" ஒன்றுதான் என்று சொல்வது சிறிதும் மிகையாகாது. புதையலைப் பூதம் காப்பது போல் தமிழைக் காத்துவந்த தமிழ்ப் பண்டித கோஷ்டியின் கடுஞ் சிறையிலிருந்து தமிழ்த் தாயை விடுதலை செய்தவரும், "தமிழில் என்ன இருக்கிறது?" என்று வாய் கூசாமல் பேசிவந்த கற்றறி மூடர் கூட்டத்தை முறியடித்துத் "தமிழைப் போல் பாஷையில்லை; தமிழ்க் கவிதையைப் போல் கவிதையுமில்லை" என்று ஸ்தாபித்தவருமான ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள், ஒரே எக்களிப்பாக வாய்விட்டுச் சிரித்த வண்ணம் மேல் அட்டையில் காட்சி தருகிறார். இன்றைய தினம் எல்லாரும் "ஒரே வழி" என்று ஒப்புக் கொள்ளும் மவுண்ட் பேட்டன் திட்டம், ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் ராஜாஜி சொன்ன திட்டமே என்பதை "வெள்ளி மணி"யின் தலையங்கம் ஜயபேரிகை முழக்கிக் காட்டுகிறது. "சாவி"யின் எழுத்துத் திறமையும், சின்ன அண்ணாமலையின் நிர்வாகத் திறமையும், கம்மெர்ஷியல் பிரஸ்ஸின் அச்சுத் திறமையும் சேர்ந்து "வெள்ளி மணி"யின் முதல் இதழை ஒரு விசேஷ மலராகச் செய்திருக்கின்றன. தமிழ் நாடெங்கும் தமிழர்கள் மங்கள மணி அடித்து "வெள்ளி மணி"யை வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

காலம் செய்யும் விந்தை! -சாஸ்திரி



சமஸ்தான சுதந்திரம்!





விஷ வித்து

கானகம் ஒன்றில் ஒரு மகிஷமும் ஒரு மிருகேந்திரனும் பரம சிநேகமாக இருந்து வந்தன. அவற்றின் நட்பை யாராலும் கலைக்க முடியவில்லை. கடைசியில், தந்திரமே இருப்பிடமான பிராணியொன்று சிங்கத்தின் மனதில் சந்தேகம் என்ற விஷ வித்தை ஊன்றி விட்டது.

அந்த விஷ வித்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

சிங்கம் ஒரு மாதிரியாக இருந்து வருவதைப் பார்த்த காட்டெருமையின் மனதிலும் சந்தேகம் உதித்தது.

சிங்கம் எருமையை முறைத்துப் பார்த்தது.

எருமை சிங்கத்தை வெறிக்கப் பார்த்தது.

சிங்கத்தின் மீசைகள் பிரமாதமாகத் துடித்தன.

எருமையின் கண்கள் பயங்கரமாகச் சிவந்தன.

சிங்கம் தன் முன்னங்கால் நகங்களை பூமியில் அடித்துத் தீட்டிக் கொண்டது.

காட்டெருமையோ வென்றால், கேந்திர ஸ்தானத்தில் நின்று கொம்புகளை கூராகச் சாய்த்து வைத்துக் கொண்டது.

அவ்வளவுதான். ஒரே பாய்ச்சல்! அகோர யுத்தம் மூண்டு விட்டது.

சிங்கத்தின் கர்ஜனையும் எருமையின் எக்காளமும் ஆரண்யம் முழுவதையும் அல்லோல கல்லோலப் படுத்தி விட்டன!

* * *

இன்று வல்லரசுகளின் கதையும் மேற்கூறிய விதம்தான் ஆரம்பமாகியிருக்கிறது.

உலகம் முழுவதையும் அந்தகாரத்தில் ஆழ்த்திய கோர யுத்தம் முடிந்து இரண்டு வருஷங்கள் ஆகின்றன.

ஆனால், இன்னும் அமைதி ஏற்படவில்லை. அதற்கு மாறாக, வல்லரசுகளின் மனதில் சந்தேகமாகிற விஷ வித்து வேரூன்றி நாளுக்கு நாள் தகராறு முற்றி வருகிறது.

ஐரோப்பா முழுவதும் பொதுவுடைமைப் பயங்கரம் பரவி வருவதாகவும், அதைத் தடுக்க அமெரிக்கா தன் முழு சக்தியையும் உபயோகித்து விட வேண்டும் என்றும், இல்லாவிடில் உலகமே தலைகீழாகப் போய் விடும் என்றும் பிரஸிடெண்ட் ட்ரூமன் பறைசாற்றி வருகிறார்.

ஐரோப்பாவில் ருஷியாவின் செல்வாக்கு பரவி விடாமல் தடுப்பதற்காக அமெரிக்கா 1,800 கோடி டாலர் செலவழிக்கத் தயாராக இருக்கிறதென்றால், அமெரிக்க—ருஷியா தகராறு எவ்வளவு தூரம் முற்றியிருக்கிறது என்பதை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

* * *

ஆனால், இவ் விஷயமாக அமெரிக்காவிலேயே பலத்த அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது.

ஐரோப்பாவில் ருஷியாவின் செல்வாக்கு பரவக் கூடாது என்பதில் அமெரிக்கா மிகுந்த அக்கறை கொண்டிருப்பது போல், அங்கு அமெரிக்காவின் செல்வாக்கு பரவிவிடக் கூடாது என்பதில் ருஷியாவும் அதிக அக்கறை கொண்டிருப்பது இயற்கைதானே என்று ஸ்ரீமதி ரூஸ்வெல்ட் (காலஞ்சென்ற அமெரிக்க பிரஸிடெண்டின் மனைவி) கேட்கிறார். ருஷியாவுடன் சமரசமாகப் போவதுதான் புத்திசாலித்தனமேயன்றி, வீம்பு பேசி ருஷியாவை விரோதித்துக் கொள்ளுவதால் எதுவும் உருப்பட முடியாது என்றும் அந்தப் பெண்மணி எச்சரிக்கை செய்திருக்கிறார்.

உலகத்தில் ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்ச உக்கிரத்தின் பெரும் பகுதியையும் நிவர்த்திக்கக் கூடிய நிலைமையில் இருக்கும் அமெரிக்கா, அரசியல் நோக்கம் கொண்டு உணவுப் பொருள்களைப் பாரபட்சமாக விநியோகம் செய்வதுடன், பல்வேறு நாடுகளுக்

கும் உணவுக்குப் பதிலாக மல்லைக் கொடுப்பதுபோல் யுத்த தளவாடங்களை அபரிமிதமாக அனுப்ப முனைந்திருக்கிறதென்றும் ருஷியப் பத்திரிகைகள் புள்ளி விவரங்களுடன் அமெரிக்கா மீது குற்றஞ் சாட்டுகின்றன.

"இன்றுள்ள அமெரிக்க சர்க்காரை இராணுவ மயமான ஒரு சர்க்கார் என்றே கூறவேண்டும். ஏதோ இன்று வரையில் அவர்கள் அணுகுண்டு ஆயுதத்தின் ஏகபோக சொந்தக்காரர்களாக விளங்கிவருகிறார்கள். யுத்தத்துக்கு முன் இருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இப்போது அவர்களிடம் துருப்புகள் இருக்கின்றன. இன்று அவர்களின் ராஜதந்திரம் உலகம் முழுதும் வியாபிக்கும் அலங்கோல அணுகுண்டு ராஜதந்திரமாகவே இருந்து வருகிறது. உலகிலுள்ள எந்த தேசத்தின் விஷயத்திலும் தலையிட அமெரிக்காவுக்கு உரிமை யுண்டு என்பதே ட்ருமனின் சித்தாந்தம்! ஐக்கிய நாடுகள் சபைகூட தங்களுக்குக் கீழ்ப்பட்டது என்பதே அமெரிக்க சர்க்காரின் அபிப்பிராயம்" என்று பிரபல ருஷியப் பேராசிரியரான இவான் லெமின் கூறுகின்றார்.

* * *

சமீபத்தில் ஐரோப்பாவில் யாத்திரை செய்த சிறந்த அமெரிக்கத் தலைவர்களில் ஒருவரான ஹென்றி வாலஸ், அமெரிக்காவின் தற்போதைய கொள்கை பயங்கரமான யுத்தத்தில் கொண்டு போய்விடுவது நிச்சயம் என்று கூறியிருப்பதை எவரும் அலட்சியமாகக் கருதுவதற்கில்லை.

"ருஷியா மீதுள்ள சந்தேக புத்தியை அமெரிக்கா ஒழிக்க வேண்டும். ருஷிய எல்லையைச் சுற்றி ருஷியாவுக்கு விரோதமாகவும் தனக்குச் சாதகமாகவும் பல் வேறு நாடுகளையும் திரட்டுவதற்காக அமெரிக்கா செலவழிக்கும் தொகையை, உலகில் விவசாய, கைத்தொழில் அபிவிருத்திக்காகவும் அற்புதமான ஆக்கத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் உபயோகிக்க வேண்டும். இன்று உலகம் நாடுவது அதிக உணவும், வசதிகளுமேயன்றி, அதிக அணுகுண்டுகளும் அழிவு ஆயுதங்களும் அல்ல" என்று வாலஸ் அமெரிக்காவின் வண்டவாளங்களை அம்பலப் படுத்தியிருக்கிறார்.

ஆனால், அமெரிக்க அதிகாரிகளின் தற்போதைய போக்கைக் கவனிக்கும்போது அத்தகைய அரிய யோசனை அமுலுக்கு வருமென்று தோன்றவில்லை.

ஏனெனில், இரு வல்லரசுகளுக்கும் பரஸ்பரம் ஏற்பட்டுள்ள சந்தேகம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறதேயன்றி, தணிவதற்கான வழியைக் காணோம்.

* * *

"நம்மிடம் அணுகுண்டு இல்லையாயின், ஐரோப்பா முழுவதையும் ஆக்கிரமித்துக் கொள்ளும்படி முன்பே ஸ்டாலின் செம்படைகளுக்கு உத்தரவிட்டிருப்பார்" என்று முன்னாள் ருஷியாவில் அமெரிக்க ஸ்தானிகராக இருந்த வில்லியம் புல்லிட், ட்ருமன் கோஷ்டியினருக்குத் தூபம் போடுகிறார்.

ஆனால், ருஷியா பலம் பொருந்தியதாக இராவிடில் இதுவரை ஐரோப்பா முழுவதும் ஆங்கிலோ-அமெரிக்க ஆதிக்கம் ஏற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இச்சந்தர்ப்பத்தில், முன்பு அமெரிக்காவின் உள்நாட்டு மந்திரியாக இருந்த ஜேம்ஸ் பைர்னஸ் கூறியுள்ள அறிவுரைகளை அமெரிக்கத் தலைவர்கள் கவனித்து, அவற்றின்படி தங்களைச் சீர்திருத்திக் கொள்ளுவார்களாயின், இன்றைய நெருக்கடி தீர ஏது உண்டு.

"யுத்தம், யுத்தம் என்ற கோஷம் தான் எங்கணும் கேட்கிறதேயன்றி, சமாதானம் என்ற பேச்சே காதில் விழவில்லை. ருஷியாவின் சட்டாம் பிள்ளைத்தனத்துக்கு உட்பட்டு, அது கூறும் சமாதான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நாம் கூறுகிறோம். அப்படியிருக்க நம்முடைய சட்டாம் பிள்ளைத் தனத்துக்கு உட்பட்டு, ருஷியா நாம் கூறும் சமாதான நிபந்தனைகளை மாத்திரம் அங்கீகரிக்க வேண்டும் என்பது என்ன நியாயமோ, தெரியவில்லை! ருஷியா தோல்வியடைந்த பகை நாடு அல்ல. பலம் இல்லாத சிறிய நாடும் அல்ல. இன்று ருஷிய ஜனங்களோ, அல்லது அமெரிக்க ஜனங்களோ யுத்தத்தை விரும்பவில்லை. அப்படியிருக்க 'யுத்தம்' என்ற கோஷம் அர்த்தமற்றதாகும். ஒரு வேளை யுத்தம் ஏற்படுமாயின், நிர்வாகத் திறமையற்ற சர்க்கார் தலைவர்கள் தான் அதற்குக் காரணஸ்தர்களாக இருப்பார்களே யன்றி வேறெவருமல்ல. ருஷியாவை அமெரிக்கா சமத்துவ நோக்கத்துட

னும் மரியாதையாகவும் நடத்த வேண்டும்'' என்று ஜேம்ஸ் பைர்னஸ் கூறுகிறார்.

தவிர, யுத்தகாலத்தில் சிநேகமாக இருந்த ருஷியாவும் அமெரிக்காவும் சமாதான காலத்தில் சிநேகமாக இருப்பது சாத்தியமற்ற காரியமா என்று சில தினங்களுக்கு முன் மார்ஷல் ஸ்டாலின் கேட்ட கேள்விக்கு அமெரிக்க ஜனாதிபதி இதுவரையில் சரியான பதில் அளித்ததாகத் தெரியவில்லை.

இதையெல்லாம் கவனிக்கும்போது ஐரோப்பாவின் எஜமானன் [யார் என்பதை நிர்ணயிப்பதிலே தான் அமெரிக்கா நாட்டம் கொண்டிருப்பதாகத் தெரிகிறதேயன்றி, உண்மையான சமாதானத்தில் சிரத்தை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

* * *

நிற்க, சென்ற வாரம் ஐரோப்பாவில் நிகழ்ந்துள்ள சம்பவம் உலகத்தின் கவனத்தையே இழுத்திருக்கிறது.

அதாவது ஐரோப்பாவில் யார் எஜமானாக இருப்பது என்பது பற்றி பலத்த போட்டி ஆரம்பமாகி விட்டதென்பதையே மேற்படி சம்பவம் காட்டுகிறது.

இரண்டு மாதங்களுக்கு முன் நிடரென்று ஒருநாள் ட்ருமன் உலகம் முழுதும் ஒரு கொந்தளிப்பை உண்டு பண்ணியது வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

ருஷியாவின் தலையீட்டைத் தடுத்துப் பாதுகாப்பளிப்பதற்காக கிரீஸ், துருக்கி இவ்விரு நாடுகளுக்கும் 40 கோடி டாலர் கடன் கொடுத்து உதவ அமெரிக்கா நிர்மாணித்திருப்பதாக ட்ருமன் அறிவித்தது, உலகையே திடுக்கிடச் செய்தது. ஏனெனில், ருஷியாவை அமெரிக்க சர்க்கார் பகிரங்கமாகத் தாக்க ஆரம்பித்தது அதுதான் முதல் தடவையாகும்.

ஆனால், ட்ருமனின் மேற்படி விபரீதத்துக்கு சென்ற வாரம் ஸ்டாலின் சரியான பதில் கொடுத்துவிட்டார்.

அதாவது, திடீரென்று ஒரு நாள் ஹங்கேரியிலுள்ள குடியரசு சர்க்கார் மந்திரிகள் கைதியானார்கள்; சர்க்கார் கவிழ்ந்தது. ருஷிய அதிகாரிகளின் உதவியால் மற்றொரு சர்க்காரும் அமைக்கப்பட்டது. ஏற்கனவே இருந்த சர்க்கார் பாஸிஸ்டு ஆட்சியை ஸ்தாபிக்க முயற்சித்து வந்தார்கள் என்பதே ருஷியாவின் குற்றச்சாட்டாகும்.

அந்தக் குற்றச் சாட்டு எவ்வளவு தூரம் உண்மை என்பதை ஆராய்வது அனாவசியம்.

ருஷியாவுக்கு விரோதமாக கிரீஸ், துருக்கி முதலிய நாடுகளுக்கு அமெரிக்கா உதவி புரிந்தது நியாயமாயின், அமெரிக்காவுக்கு விரோதமாக ஹங்கேரியில் ருஷியா தன் இஷ்டப்படி நடக்கும் சர்க்காரை அமைத்ததும் நியாயம்தான் என்றே ஏற்படும்!

பல்கேரியா, ருமேனியா முதலிய தேசங்களிலும் ருஷியாவுக்கு விரோதமாகவுள்ள பல தலைவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

எனவே, கிரீஸ், துருக்கியைத் தவிர இதர பால்கன் நாடுகளில் தன் செல்வாக்கைப் பலப்படுத்த ருஷியா முனைந்திருக்கிறது என்பதையே அச்சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

ருஷியாவின் மேற்படி செய்கையை ட்ருமன் கண்டித்திருக்கிறார். ஹங்கேரியில் ருஷியாவுக்கு ஆதரவான சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக, ஹங்கேரியின் புனருத்தாரணத்துக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த கடன் தொகையைக் கூடக் கொடுக்க முடியாது என்று மறுத்து விட அமெரிக்கா நிர்மாணித்திருக்கிறது.


மற்றும் ஐக்கிய நாடுகள் அடங்கிய ஐரோப்பாவைச் சிருஷ்டிக்கவும் அமெரிக்கா பெரு முயற்சி செய்து வருகிறது.

ருஷியாவை விலக்கி விட்டு அமெரிக்கா அத்தகைய முயற்சியில் ஈடுபடுமாயின் அம் முயற்சி படுதோல்வியடைவது நிச்சயம்.

இன்று உலகிலேயே மகத்தான சக்தியுடன் விளங்கும் வல்லரசுகள் அமெரிக்காவும் ருஷியாவும்தான்.

எனவே, அவ்விரு நாடுகளும் பரஸ்பரமுள்ள சந்தேகத்தை ஒழித்துச் சமாதானத்துடன் இருந்தால்தான் உலகிலும் சமாதானம் நிலவ வழியுண்டு.

அவ்விதமின்றி, இரண்டில் எதுவாயினும் ஒன்றை விலக்கி தான் உலகத்துக்குச் சட்டாம்பிள்ளையாக விளங்க வேண்டும் என்று முயற்சிக்கும் வரையில், உலக நாடுகள் சமாதானத்துடனும், சந்தோஷத்துடனும் வாழ்வது முடியாத காரியமாகி விடும்.


"லக்ஸ் டாய்லட் சோப்பை உபயோகித்து
உங்கள் சருமத்தை மிருதுவாகவும் சுத்த
மாகவும் வைத்துக்கொள்ளுங்கள்"
என்று கூறுகிறார்
ரூபலேகா
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்பு!
LTS. 155-111-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED



காணாத காட்சிகளும் கண்டேன்!

"கல்கி"

என்னமோ ஏதோ என்று நேயர்கள் பிரமித்துப் போக வேண்டாம். ஸ்ரீ சின்ன அண்ணாமலை காணாத காட்சிகள் சிலவற்றை அடியேன் கண்டேன் என்பதைத்தான் தலைப்பில் குறிப்பிட்டிருக்கிறேன்.

சபாநாயகர் ஸ்ரீ சிவசண்முகம் அவர்களின் ஸ்தல யாத்திரை, ஆலய தரிசனம் முதலியவற்றைக் குறித்து ஸ்ரீ சின்ன அண்ணாமலை சாங்கோபாங்கமாகவும் ரசமாகவும் எழுதியிருக்கிறார். ஆனால் ஸ்ரீ சிவசண்முகம் எந்த முக்கிய சம்பவத்துக்காக மேற்படி பிரயாணத்தை மேற்கொண்டாரோ, அந்தச் சம்பவத்துக்குச் சின்ன அண்ணாமலை வராமல் இருந்துவிட்டார். அந்த முக்கிய சம்பவம் கழுகுமலை ஆலயப் பிரவேசமே யாகும். அந்த வைபவத்தை முன்னிட்டே ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை திருநெல்வேலி காங்கிரஸ் ஊழியர்களால் அழைக்கப்பட்டார். ஆனால் குறிப்பிட்ட தேதியில் மேற்படி ஆலயப் பிரவேசம் நடைபெறவில்லை. சர்க்காரிடமிருந்து உத்தரவு வருவதில் எதிர்பாராத தடங்கலும் தாமதமும் ஏற்பட்டன. இது ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளைக்குச் சிறிது ஏமாற்றத்தை அளித்தது. கழுகுமலை காங்கிரஸ் ஊழியர்கள் அளவிலா ஏமாற்றம் அடைந்தார்கள். சர்க்காரின் பொதுச் சட்டம் வருவதற்கு முன்னாலேயே திருநெல்வேலியிலுள்ள முக்கியமான ஆலயங்களையெல்லாம் திறந்து விட்டுவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்த ஸ்ரீ சோமயாஜுலுவும் அவருடைய சகாக்களும் துடிதுடித்துப் போனார்கள். ஆனால் வெறுமனே துடித்துக் கொண்டு அவர்கள் சும்மா இருந்துவிடவில்லை. கோவில்பட்டியின் பிரபல காங்கிரஸ் ஊழியரான ஸ்ரீ சண்முகம் பிள்ளையைச் சென்னைக்குப் போகும் ரயிலில் தூக்கிப் போட்டு, "உத்திரவை வாங்கிக் கொண்டுதான் திரும்ப வேண்டும்" என்று ஸ்ரீ சோமயாஜுலு கட்டளையிட்டார். அந்த அன்புக் கட்டளையை நிறைவேற்ற ஸ்ரீ சண்முகம் பிள்ளை சென்னை சென்று மந்திரிமார்களைத் தேடி அலைந்து, அவர்களுடைய காரியதரிசிகளைத் தேடி அலைந்து, நலிந்து தேவஸ்தான பரிபாலன போர்டு தலைவர் ஸ்ரீ சின்னையா பிள்ளையைத் தேடிக் கோடைக்கானலுக்குச் சென்றலைந்து, கடைசியில் உத்தரவைத் தந்தி மூலம் அனுப்பிவிட்டுத் திரும்பி வந்தார். அதிர்ஷ்ட வசமாகக் காங்கிரஸ் மந்திரிமார்களின் தயவினாலும் ஸ்ரீ சின்னையா பிள்ளை அவர்களின் தீவிர ஒத்துழைப்பினாலும் காரியம் சித்தியாயிற்று.

'தவறியது தங்கம்' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அது போலவே ஒரு தடவை தேதி வைத்துத் தவறிப்போன கழுகுமலை ஆலயப்பிரவேச வைபவமானது மே௴ 20௳ அமோகமான உத்சாகத்துடன் நடைபெற்றது. இதற்காக இரண்டாம்

நடவை ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை அவர்கள் சென்னையிலிருந்து வந்தார். மேற்படி தினத்தில் காலை சுமார் 10 மணிக்கு நாங்கள் கழுகுமலையை அடைந்தபோது, ஆலயத்தின் முன் வாசல் கண் கொள்ளாக் காட்சி அளித்தது. அங்கே கூடி நின்று காத்திருந்த சுமார் ஐயாயிரம் ஜனங்களும், சபா நாயகர் சிவசண்முகத்தைப் பார்த்ததும், பூரண சந்திரனைக் கண்ட சமுத்திரத்தைப் போல் உற்சாக ஆரவாரம் செய்தார்கள். அந்தச் சின்ன ஊரில் அவ்வளவு பெரிய கூட்டம் கூடியிருந்தது அதிசயந்தான்! அதைவிடப் பெரிய அதிசயம், அந்தக் கூட்டத்தின் நடுவில் சபாநாயகர் ஆலயப் பிரவேசம் செய்வதற்கு வழிவிட்டு இருபுறமும் ஒழுங்காக ஜனங்கள் நின்று ஆரவாரித்ததாகும். இத்தகைய ஒழுங்குக்குக் காரணம் சங்கரன் கோவிலிலிருந்து வந்திருந்த காங்கிரஸ் தொண்டர் படையின் முன்னேற்பாடுதான் என்று தெரிந்தது.

• • •

தமிழ் நாட்டில் உள்ள பிரபல முருகன் கோவில்களில் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி விசேஷம் உண்டு. கழுகுமலையும அப்படியே விசேஷமான ஸ்தலம். அருணகிரிநாதர் இந்த ஸ்தலத்தைப் பற்றிப் பாடியிருக்கிறார். காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் கழுகுமலை முருகனை வைத்துத்தான் அந்த அருமையான தமிழ்ச் சுவை சொட்டும் பாமர கீதங்களைப் பாடினார். கழுகுமலை எட்டயபுரம் சமஸ்தானத்தில் உள்ளது என்பதை நேயர்களுக்கு இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்படியிருக்கும்போது, கழுகுமலை முருகனைப் பற்றி நமது தேசிய மகாகவி பாரதியார் பாடாமல் இருப்பாரா?

"முருகா முருகா முருகா!" என்று கதறிப் பாடியிருக்கிறார்.

"வருவாய் மயில்மீதினிலே
வடிவேலுடனே வருவாய்"

"அடியார் பலரிங்குளரே
அவரை விடுவித்தருள்வாய்!"

என்பது போன்ற அற்புதமான கவிதை வரிகளை இந்த ஸ்தலத்திலுள்ள முருகனைப் பார்த்துத்தான் பாரதியார் ஆவேசத்துடன் பாடினார். இத்தகைய உயர்ந்த பாடல்களுடனே "கழுகுமலை குறவி குளம்" என்னும் சிராய்ப் பாட்டினாலும் மேற்படி ஸ்தலம் புகழ் பெற்றிருக்கிறது.

இவ்வளவு மகிமை வாய்ந்த முருகன் ஆலயத்துக்குள்ளே பரம பக்தரான ஸ்ரீ சிவ



கழுகுமலை ஆலய வாசலில் சபாநாயகருக்கு வரவேற்பு.



பழனி மலை மீது பக்தர்களின் பெருங் கூட்டம்

சண்முகம் அவர்களைப் பின்தொடர்ந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் பிரவேசித்த போது எழுந்த "முருகா முருகா" என்ற கோஷம் எப்பேர்ப்பட்ட நாஸ்திகர்களையும் ஒரு கணம் ஆடச் செய்திருக்கும்.

மற்றும் பல ஆலயங்களில் நிகழ்ந்தது போலவே இங்கும் அர்ச்சகர்கள் மிக்க பக்தி சிரத்தையுடனும் ஆர்வத்துடனும் ஸ்ரீ சிவசண்முகத்தை வரவேற்று சுவாமி தரிசனம் செய்வித்தார்கள். எட்டயபுரம் மகாராஜாவின் உத்தரவுப்படி ஸ்ரீ சிவ சண்முகம் பிள்ளை அவர்களின் சிரஸில் பரிவட்டமாகக் கட்டப்பெற்ற பீதாம்பரத்தைச் சபாநாயகரே எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப் பட்டது.

பிறகு, கழுகு மலையின் அழகான கோவில் பிரகாரத்தில் உள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடந்தது. கோவில்பட்டி தாலுகா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ மீன்துள்ளி ராமானுஜ நாயக்கர் அவர்கள் தமது முறுக்கி விட்ட மீசை சகிதமாக அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீ மேகநாதன் சொல்மாரி பொழிந்தார். ஸ்ரீ சோமயாஜுலு எடுத்த காரியத்தை நிறைவேற்றிய பெருமிதத்துடன் உற்சாகமாகப் பேசினார். ஸ்ரீ சிவசண்முகம் பக்தி மிகுதியினால் அதிகமாகப் பேச முடியாமல் ஒரு சில வார்த்தைகளுடன் நிறுத்திக் கொண்டார். கழுகுமலை ஆலயப் பிரவேசத்துக்காக அரும்பாடுபட்ட ஸ்ரீ பூசைகப்ப பிள்ளையும் ஸ்ரீ தீனதயாள லாலா அவர்களும் உடல் உருகி மனன் உருகி உளம் உருகித் தங்கள் சொல்ல முடியாத மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். கோவிலில் பிரசன்னமாயிருந்த போலீஸ்காரர்களுக்கு நான் ஒரு விண்ணப்பம் செய்து கொண்டேன். "ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை அவர்களின் சொத்து ஒன்று காணமற் போய்விட்டது. திருட்டுப் போன சொத்து நமது ஸ்ரீ சிவசண்முகம் அவர்களின் இருதயந்தான். திருடிய பேர்வழி யார் என்பதும் எனக்குத் தெரியும். 'செம்மான் மகளைத் திருடும் திருடன்' என்று பாடல் பெற்ற முருகப் பெருமான்தான். அந்தப் பொல்லாத திருடன் இத்தனை ஆயிரம் பேருக்கு மத்தியில் நமது சபாநாயகரின் இருதயத்தைத் திருடிக் கொண்டு விட்டான். இரு

நயத்தைப் பறிகொடுத்து விட்டபடியினுலே தான், எனது சபாநாயகரால் மற்ற இடங்களிலே போல விஸ்தாரமாகப் பேச முடியவில்லை. தயவுசெய்து போலீஸார் முருகனைத் திருட்டுக் குற்றத்துக்காகச் சார்ஜு செய்து சபாநாயகரின் இருதயத்தைத் திருப்பிக் கொடுக்கச் சொல்ல வேண்டும்!'' என்று கேட்டுக் கொண்டேன்.

எட்டயபுரம் மகாராஜா இந்த வைபவத்துக்கு வரமுடியவில்லையென்றாலும் அவருடைய பிரதிநிதி ஸ்ரீ சேஷாச்சாரியார் வந்திருந்து எல்லாக் காரியங்களையும் கூட இருந்து நடத்தி, வந்திருந்த பிரமுகர்களுக்கு இனிய விருந்தும் நடத்திவைத்தார்.

இப்படி எல்லாம் சிறப்பாகவும் சுபமாகவும் முடிந்த பிறகு, அன்று போலீஸ்காரர்களின் கூட்டம் கழுகு மலையில் அவ்வளவு அதிகம் இருந்ததற்குக் காரணம் என்னவென்று விசாரித்தேன். கழுகுமலையில் ஆலயப் பிரவேசத்துக்குக் கொஞ்சம் எதிர்ப்பு இருந்ததாகவும், எனவே முன் ஜாக்கிரதையாக ஜில்லா அதிகாரிகள் போலீஸ் படை அதிகம் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிந்தது.

எதிர்ப்பின் விவரத்தை நேயர்கள் அறிந்தால் மிகவும் அதிசயப்படுவார்கள். தமிழ் நாட்டின் மற்றப் பகுதிகளைப் போல் அல்லாமல் பாண்டிய நாட்டில் நாடார்களுக்கும் ஆலயப் பிரவேச உரிமை இல்லாமலிருந்தது. கழுகு மலை ஜனத்தொகையில் தேவர்மார்களும் நாடார் மகாஜனங்களும் அதிகமானவர்கள். நாடார்களுக்கும் தேவர்களுக்கும் ஏதேதோ காரணமாகப் பழைய மனஸ்தாபங்கள். ஆகவே நாடார்கள் ஆலயத்துக்குள் பிரவேசிப்பதையும், குளத்தில் தண்ணீர் எடுப்பதையும், சில வீதிகளில் நடப்பதையும்கூடத் தேவர்மார்கள் பலமாக எதிர்த்தார்கள். எதிர்த்தது மட்டுமல்ல; பலாத்காரமாகத் தடையும் செய்தார்கள். நாடார்கள் சில வீதிகளில் நடந்தது

சம்பந்தமாக ஏற்கெனவே கிரிமினல் வழக்குகளும் நடந்திருக்கின்றன!

இந்தத் தேவர்—நாடார் மனஸ்தாபந்தான் கழுகுமலை ஆலயப் பிரவேசத்துக்குப் பெருந் தடங்கலாயிருந்தது. இந்தத் தடங்கலை நீக்குவதற்கு ஸ்ரீ சோமயாஜுலுவும், உள்ளூர்க் காங்கிரஸ் பிரமுகர்களும் பெருமுயற்சி செய்தார்கள். எட்டயபுரம் ராஜாவின் பூரண அனுதாபமும் மேற்படி முயற்சிக்குக் கிடைத்திருந்தது.

"ஆலயப் பிரவேச இயக்கம் தேசத்துக்கே பொதுவான விஷயம். வேறு காரணங்களை மனதில் வைத்துக் கொண்டு இதற்குத் தடங்கல் செய்யாதீர்கள்!" என்று தேவர்மார்களுக்குச் சாத்வீக முறையில் எடுத்துச் சொல்லியதன் பேரில் அவர்கள் பெரும்பாலும் மனம் மாறிவிட்டதாக அறிந்தேன். அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு, தேவர்மார்கள் முழுதும் மனம் மாறி விடுவார்கள் என்றும், கழுகுமலை தேவர்மார்களும் நாடார் மகாஜனங்களும் இப்போது சகோதர பாவம் கொண்டு ஏகமாய் வாழ்வார்கள் என்றும் நம்புகிறேன்.

அன்றைய தினத்து ஆலயப் பிரவேச நிகழ்ச்சி கழுகுமலை நாடார் மகா ஜனங்களுக்கு மிக்க உற்சாகத்தையும் குதூகலத்தையும் அளித்ததில் வியப்பில்லை அல்லவா? எனவே, அன்று பிற்பகலில் நாடார் மகா ஜனங்களின் தனிக் கொண்டாட்டம் ஒன்று நடந்தது. ஸ்ரீ ஷண்முகம் பிள்ளைக்கு



திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் சந்நிதியில்......

வரவேற்பு உபசாரங்கள் அளிக்கப்பட்டன. சபாநாயகருடன் போனதின் பலனாக, எனக்கு ரூபாய் ஐம்பத்தொன்று கிடைத்தது! "எனக்கு' என்றால், எனக்கே இல்லை; எட்டயபுரம் பாரதி மண்டபத் திருப்பணிக்காகத்தான். மேற்படி கொண்டாட்டத்தை நடத்திய இளம் தேச பக்தர்கள், கழுகுமலை நாடார்கள் சார்பாக மேற்படி தொகையை அளித்தார்கள். எல்லாம் மகாகவி பாரதியாரின் பெருமை தான்; அவர் பாடிய கழுகுமலை முருகனின் திருவருள்தான்.

• • •

கழுகுமலைக்குத் தாம் வரும் சந்தர்ப்பத்தில் திருப்பரங்குன்றம், பழனி ஆகிய இந்த இரண்டு ஸ்தலங்களையும் தரிசிக்க வேண்டுமென்று ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை தெரிவித்திருந்தார். எனவே, திருநெல்வேலித் தொண்டர்கள் அதற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். கழுகுமலையிலிருந்து திருப்பரங்குன்றத்துக்கு மோட்டாரில் புறப்பட்டோம். மாலை சுமார் ஏழு மணிக்கு அங்கே போய்ச் சேர்ந்தோம்.

திருப்பரங்குன்றம் தமிழ் நாட்டில் பழம் பெருமை வாய்ந்த ஸ்தலம். நக்கீரர் பாடிய முருகனின் ஆறு படை வீடுகளில் ஒன்று. முருகனுக்கும் தெய்வயானைக்கும் திருப்பரங்குன்றத்திலே தான் திருமணம் நடந்ததாகக் கேள்வி. அப்படிப்பட்ட புராதன ஸ்தலம் சமீபத்தில் புதிய ஒரு பெருமை அடைந்தது என்பதையும் நேயர்கள் அறிவார்கள்.

திருப்பரங்குன்றத்துக் கோயில் வாசலில் எங்கள் கார் நின்றதும், அங்கு நெருக்கி நின்ற கூட்டத்தில் ஒருவர் "ராஜாஜிக்கு ஜே!" என்று கோஷித்தார். அவ்வளவு தான்; ஸ்ரீ மெகாநதன் காரிலிருந்தபடியே தாவிக் குதித்து அந்த மனிதரைக் கட்டிக் கொண்டார். "ஐயா! திருப்பரங்குன்றத்தில் முருகனைத் தரிசிக்க வேண்டியதில்லை; தங்களைத் தரிசித்ததே போதும்!" என்று சொன்னார். ஆனாலும் கோயில் வாசலில் யானையுடனும், யானைத் துதிக்கையை யொத்த மாலையுடனும், பலவகை வாத்திய கோஷங்களுடனும் சபாநாயகரை வரவேற்பதற்குக் காத்திருந்தார்கள். மதுரைக் கோயிலின் எக்ஸிகியூடிவ் அதிகாரிதான் திருப்பரங்குன்றத்துக்கும் அதிகாரி. அவர் முன்னதாகவே வந்து எல்லா ஏற்பாடுகளும் செய்து வைத்துக் கொண்டு காத்திருந்தார். எனவே, சபாநாயகரின் ஆலயப் பிரவேசம் ஜாம் ஜாம் என்று நடந்தது. திருப்பரங்குன்றம் ஆலயத்துக்குள் பிரவேசிக்கும்போது ஒவ்வொரு மண்டபத்தைத் தாண்டியதும் சில படிகள் ஏறி மேலே செல்லவேண்டியிருக்கிறது. அப்படிப் படி ஏறிப் போகும்போது பூவுலகிலிருந்து சொர்க்க லோகத்துக்குப் போகிறோம் என்னும் உணர்ச்சியே உண்டாகிறது. கடைசிப் படி ஏறி, முருகனைத் தரிசனம் செய்யும்போதோ இந்த உலகத்தின் ஞாபகமே இல்லாமல் போய்விடுகிறது.

தரிசனம் முடிந்து கோயிலுக்கு வெளியே வந்ததும், நாங்கள் எல்லாரும் காரில் ஏறிக் கொண்டோம். ஆனால் மெகாநதன் மட்டும் காரில் ஒரு காலும், வெளியில் ஒரு காலுமாக நின்று, "ராஜாஜிக்கு ஜே!" என்னும் கோஷத்தைக் கிளப்பினார். அங்கே நின்ற மகாஜனங்களும் சமுத்திர கோஷம் தோற்கும்படியாக "ராஜாஜிக்கு ஜே!" என்று பிரதித்வனி செய்தார்கள். கார் போகத் தொடங்கியதும், "ராஜா



சபாநாயகர் சிவசண்முகம் நமஸ்கரித்து எழுந்திருக்கிறார்.

ஜிக்கு ஜே!'' என்னும் கோஷம் இச் சமயம் எவ்வளவு பொருத்தமானது என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டு போனேன்.

* * *

ஸ்ரீ மோகாதனும் நானும் அரசியலைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தபோது, ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை அவர்களின் கவனம் வேறு எங்கேயோ இருந்ததாகத் தோன்றியது. திடீரென்று ஸ்ரீ சிவசண்முகம் "உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கேட்கிறீர்களா?'' என்றார். ஸ்ரீ சிவசண்முகம் சொல்லும் 'ஒன்று' எப்போதும் மிக முக்கியமாயிருக்குமாகையால், என் முழு கவனத்தையும் அவர்பால் திருப்பிச் "சொல்லுங்கள்!'' என்றேன். ஸ்ரீ சிவசண்முகம் சொன்னார்:—

"ஆறு வருஷத்துக்கு முன்னால் இந்தத் திருப்பரங் குன்றத்துக்கு ஒரு முறை வந்திருந்தேன். ஆலயத்துக்கு எதிரே ஒரு வெற்றிலைப் பாக்குக்கடை இருந்ததே, அதைக் கவனித்தீர்களா? அந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்காரரிடம் பேச்சுக் கொடுத்துக் கொஞ்சம் சிநேகம் செய்து கொண்டு அந்தக் கடையில் ஒரு மூலையில் உட்கார்ந்தேன். நக்கீரரின் 'திருமுருகாற்றுப் படை' என்ற நூலைக் கையில் கொண்டு வந்திருந்தேன். அதை எடுத்துப் படித்தேன். ஒரு முறை, இரண்டு முறை, மூன்று தடவை படித்தேன். முருகனுடைய ஆறு படை வீடுகளில் இந்தத் திருப்பரங் குன்றம் ஒன்று என்பது தெரியுமோ, இல்லையோ? முருகனுடைய பக்தனாகிய எனக்கு ஆலயத்துக்குள் போய் முருகனைத் தரிசிக்க வேண்டும் என்று எவ்வளவோ ஆவலாயிருந்தது. நான் பக்தியோடு திருமுருகாற்றுப் படை படிப்பதைப் பார்த்து விட்டுக் கடைக்காரர் 'ஏன்? கோயிலுக்குள் போய் சுவாமி தரிசனம் செய்வதுதானே? இன்று உற்சவ; அலங்காரம் அற்புதமாயிருக்கும்' என்றார். என்னுடைய ஆவல் இன்னும் அதிகமாயிற்று. என்னை இந்த ஊரில் யாருக்கும் அப்போது தெரியாது. வேண்டுமானால் நான் கோயிலுக்குள் தாராளமாயப் போயிருக்கலாம். ஆனால் அப்படிச் சாதியை மறைத்துத் திருட்டுத்தனமாகக் கோயிலுக்குள் போக இஷ்டப் படவில்லை. ஆகையால் மொத்தம் ஆறு தடவை திருமுருகாற்றுப் படையைப் படித்துவிட்டு, 'முருகா! எப்போது உன் ஆலய வாசல் எனக்குத் திறக்குமோ? எப்போது என் பேரில் உனக்குக் கருணை பிறக்குமோ?' என்று மனதிற்குள் பிரார்த்தித்து விட்டுக் கோயிலுக்குள் போகாமலேயே புறப்பட்டேன். அந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்காரர் என்னைப் பற்றி என்ன நினைத்தாரோ தெரியாது. 'ஒரு மாதிரி மனிதன்' என்று நினைத்திருக்கலாம்! அவ்விதம் ஆறு வருஷத்துக்கு முன்னால் எனக்குக் கிடைக்காத தரிசனம் இன்று கிடைத்தது!''

திருப்பரங்குன்றம் கோயிலுக்குள்ளே சபாநாயகர் 'ஒரு மாதிரி' மனிதராக இருந்ததின் காரணம் எனக்கு அப்போது விளங்கிறது. மேற்படி கதையைக் கேட்ட பிறகு நானே 'ஒரு மாதிரி' மனிதனாக ஆகி விட்டேன். நகைச் சுவையும் சிரிப்பும் அர்த்தமற்றுப் போயின. இப்பேர்ப்பட்ட பக்தரை ஆறு வருஷகாலமாக வெளியில் நிறுத்திவைத்த முருகன் பேரில் கோபமே வந்தது. அந்தக் கோபத்தை மதுரை மீனாக்ஷி அம்மன் மீது காட்டினேன். மதுரை சென்றதும் "நான் கோயிலுக்கு வரவில்லை'' என்று சொல்லி விட்டேன். சபாநாயகரும் மற்றவர்களும் இரவு பத்து மணிக்கு மதுரைக் கோயிலுக்குச் சென்று ஸ்ரீ மீனாக்ஷி அம்மனையும் ஸ்ரீ சுந்தரேசுவரரையும் தரிசனம் செய்து விட்டுத் திரும்பி வந்தார்கள்.

* * *

மறு நாள் அதி காலையில் திண்டுக்கல் மார்க்கமாகப் பழனிக்குப் பிரயாண மானோம். வழியில் வாடிப்பட்டியில் காங்கிரஸ் அன்பர்கள் எங்கள் வண்டியை வளைத்துக் கொண்டு நிறுத்தினார்கள். அங்கே இ. தோ. கா. இயக்கத்தைச் சிறப்பாக நடத்திவைத்தோம். அவசரப் பொதுக் கூட்டம் ஒன்றும் பள்ளிக்கூடத் திண்ணையில் நடைபெற்றது. இது காரணமாகத் திண்டுக்கல் போகும்போது மணி பத்தரை ஆகிவிட்டது. திண்டுக்கல் நண்பர்கள் "பழனியில் சுவாமி தரிசனத்துக்கு அதிக நேரம் ஆகிவிட்டது. சீக்கிரம் வண்டியை விடுங்கள்!'' என்று சொல்லி விட்டு, வண்டியின் பாரத்தை அதிகமாக்குவதற்கு ஒரு நூறு மலைவாழைப் பழத்தைப் போட்டார்கள். வழியில் அந்த பாரத்தைக் குறைப்பதற்காகக் கூடியவரையில் நாங்கள் முயற்சி செய்து கொண்டே போய்ப் பழனியை அடைந்தோம். மலையின் அடிவாரத்தை அடைந்தபோது சரியாக மணி பன்னிரண்டு. வெய்யில் ஒரே கொளுத்தாய்க் கொளுத்திற்று. அக்கினி நட்சத்திரத்தின்

கடைசி நாள். இந்தத் தினம் விசேஷ தினம் என்ற காரணத்தினால் சுமார் இரண்டு லட்சம் ஜனங்கள் பழனி ஆண்டவனைத் தரிசிப்பதற்கு வந்திருந்தார்கள். அவர்கள் மலை ஏறிக்கொண்டும் இறங்கிக் கொண்டும் இருந்தார்கள்.

மலையில் முதலாவது படியில் காலை வைத்ததும், காய்ச்சிய இரும்புச் சட்டியைப் போல் சுட்டதைக் கண்டேன். உடனே ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை அவர்களைத் தடுத்து நிறுத்திக்கொண்டு, "ஐயா! சபாநாயகரே! இன்று நாம் மலை ஏறவேண்டாம். பழனி ஆண்டவரோ உச்சியில் போய் உட்கார்ந்திருக்கிறார். படியில் காலை வைத்தால் தகதக வென்று கொதிக்கிறது. இந்த மாதிரி ஆயிரம் படிகளுக்கு மேல் ஏறியாக வேண்டும். தயவுசெய்து இன்னும் ஒரு வருஷம் பொறுத்து இங்கே வருவோம். அதாவது 1948-ம் வருஷம் ஜூன் மாதத்தில் வருவோம். அப்போது பழனி ஆண்டவர் மலைமேலிருந்து கீழே இறங்கி வருவார். மலை ஏறாமலே நாம் ஆண்டவனைத் தரிசித்துக் கொள்ளலாம்!" என்றேன்.

"பழனி ஆண்டவராவது? கீழே இறங்கி வராவது? என்ன 'ஒரு மாதிரி' பேசுகிறீர்களே?" என்று ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை கேட்டுவிட்டுக் கவலை ததும்பிய முகத்தோடு என்னைப் பார்த்தார்.

"அதெல்லாம் 'ஒரு மாதிரி' ஒன்றுமில்லை. தாங்கள் கவலைப்பட வேண்டாம். சரியாகத்தான் சொல்கிறேன். 1948-ம் வருஷம் ஜூன் மாதம் பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறுவதாகச் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? அவ்விதம் நடந்தால் உலக சரித்திரத்திலேயே அது மகத்தான சம்பவம் அல்லவா? அப்படிப்பட்ட அதிசயம் உண்மையிலேயே நடக்கிறதா, அல்லது போவதாகச் சொல்லிப் போக்குக் காட்டிவிட்டு பிரிட்டிஷார் திரும்பி வந்துவிடுகிறார்களா என்று பார்ப்பதற்காகப் பழனி ஆண்டவர் கட்டாயம் மலைமேலிருந்து கீழே இறங்கிவரத்தான் வருவார்! வராமல் இருக்க மாட்டார். ஆகையால் அடுத்த வருஷம் திரும்பி வருவோம்! இப்போது போகலாம் வாருங்கள்!" என்றேன். சபாநாயகர் கேட்கவில்லை. "அதெல்லாம் என்னால் அடுத்த வருஷம் வரையில் காத்திருக்க முடியாது. இப்போதே. இன்றைக்கே, முருகனைத் தரிசனம் செய்துதான் ஆகவேண்டும்! மேலும், இவ்வளவு ஆயிரக்கணக்கான ஜனங்கள் வெய்யிலைப் பாராமல் மலை ஏறும்போது, நமக்கு மட்டும் என்ன வந்தது?" என்றார்.

அதற்கு மேல் நான் மறுத்துச் சொல்லவில்லை. மேலும், கொதிக்கிற மலைப்படியில் ஒரே இடத்தில் நிற்பதைக் காட்டிலும் ஏறுவது நல்லது என்று தீர்மானித்துக் கொண்டு சபாநாயகரையும் மற்றும் பதினாயிரக்கணக்கான பக்தர்களையும் பின்பற்றி நானும் பழனிமலைமீது ஏறினேன்.

* * *

மலை உச்சியை அடைந்து ஆண்டவன் கோயிலுக்குள்ளே அடி வைத்ததும், மலை ஏறிய களைப்பெல்லாம் மலை ஏறிப் போய் விட்டது! காணாத காட்சியைக் கண்ட களிப்பும், அடைய முடியாததை அடைந்த ஆனந்தமும்தான் மிஞ்சி நின்றன.

வழக்கம்போல் சபாநாயகருக்குக் கோயில் மரியாதைகள், வரவேற்புகள் எல்லாம் நடைபெற்றன. அப்புறம் பழனி ஆண்டவரின் தரிசனமும் கிடைத்தது. ஆகா! அந்த தரிசனத்தின் மகிமையைப் பற்றி வர்ணிப்பதற்குச் சின்ன அண்ணாமலையினால் தான் முடியுமே தவிர, என்னால் முடியாது. (ஒவ்வொரு வரியிலும், ஒவ்வொரு கோயிலிலும், ஒவ்வொரு சந்நிதியிலும் சின்ன அண்ணாமலை வராததைப் பற்றி நாங்கள் நினையாமலும் பேசாமலும் இருக்க முடியவில்லை. பத்திரிகைச் செய்திகளை நம்ப வேண்டாம் என்று பதினாயிரம் மேடைகளில் பிரசங்கம் செய்த மனிதர், கடைசியில் பத்திரிகைச் செய்தியை நம்பியல்லவா வராமல் இருந்து விட்டார்? 'கழுகு மலை ஆலயத் திறப்பு 27உ நடைபெறும்' என்று தவறாகப் பத்திரிகைகளில் வெளியானதை நம்பிக் கொண்டல்லவா அவர் 20உ வராமல் இருந்து விட்டார்! எனவே, சின்ன அண்ணாமலை பல பத்திரிகைகள் நடத்தி மிகத் தொல்லைப் படட்டும் என்று ஒவ்வொரு சந்நிதியிலும் வேண்டிக்கொண்டேன்!)

எக்ஸியுடிவ் ஆபீஸர் எங்களுக்குப் பழனி ஆண்டவர் தரிசனம் செய்வித்ததோடு, அன்னபூரணியின் தரிசனத்துக்கும் மலைமேலேயே ஏற்பாடு செய்திருந்தார். அவர் நன்றாயிருக்க வேண்டும்! உடனே கீழிறங்க வேண்டியதாயிருந்தால் ஆண்டவன் திருவடியிலேயே ஐக்கியமாகி விடுவதென்று நான் தீர்மானித்திருந்தேன். அதற்கு அவசியம் ஏற்படவில்லை. சுமார் நாலு மணிக்கு மலை அடிவாரத்துக்கு வந்து சேர்ந்தோம். ஒரே மூச்சில் மலை இறங்கிய கால்கள் கெஞ்சின; கொஞ்சின. ஆனால்

நம்முடைய சபாநாயகரோ, "உங்களுக்குத் தெரியுமல்லவா? மலைமேல் உள்ள பழனி ஆண்டவர் கோவில் ஆறுபடை வீடுகளில் சேர்ந்ததல்ல; மலை அடிவாரத்திலுள்ள திருவாவினன்குடி ஆலயந்தான் ஆறு படை வீடுகளில் சேர்ந்தது. அந்த ஆலயத்தை அவசியம் தரிசிக்க வேண்டும்" என்றார். திருவாவினன்குடி படை வீட்டு ஆலயத்திலும் முருகனைத் தரிசித்து விட்டு, பழனியிலுள்ள ஸினிமா தியேட்டருக்குப் போய்ச் சேர்ந்தோம். பழனி தாலூகா காங்கிரஸ் கமிட்டி தலைவரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரும், அகஸ்டு தியாகியுமான ஸ்ரீ லக்ஷ்மிபதி ராஜூவின் தலைமையில் பொதுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடந்தது. பிரசங்கங்களோ அதி விரைவாக ஓடின. ஏனென்றால், அன்று மாலை ஆறுமணிக்குத் திண்டுக்கல்லில் பொதுக் கூட்டத்துக்கு வர ஒப்புக் கொண்டிருந்தோம். பொதுக் கூட்டத்தில் பேசி விட்டு ஸ்ரீ வைசண்முகம் 8-30க்குத் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸைப் பிடிக்க உத்தேசித்திருந்தார். ஆனால் பழனியிலிருந்து புறப்படும்போதே மணி ஆறு ஆகிவிட்டது!

ஸ்ரீ வைசண்முகம் வண்டியை வேகமாய் விடும்படி தூண்டிக்கொண்டே இருந்தார். ஆனால், சாலையில் எதிர்ப்பட்ட கட்டை வண்டிக்காரர்கள் கண்டிப்பாக அவசரப் படுவதற்கு மறுத்து விட்டார்கள். அதோடு நடு ரோட்டிலேதான் போவோம் என்று பிடிவாதம் செய்தார்கள். "இங்கிலீஷ்காரனே இந்தியாவை விட்டுப் போகப் போகிறானாம்! நாங்கள் நடுரோட்டிலே போகக் கூடாதோ?" என்பது அவர்களுடைய கொள்கை என்று தோன்றியது. ஆகக்கூடி, சபாநாயகரின் அவசரம் பலிக்கவில்லை. நான் மனதிற்குள்ளே, "இன்றைக்கு நாங்கள் திண்டுக்கல் போவதற்குள்ளே திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் போய் விட்டால் இங்கிலீஷ்காரன் இந்தியாவை விட்டு விட்டுப் போவான்! இல்லாவிட்டால் போகமாட்டான்!" என்று உருப்போட்டுக் கொண்டே போனேன். நான் எதிர்பார்த்த சகுனம் நிறைவேறியது. நாங்கள் திண்டுக்கல் போவதற்குள் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் போய் விட்டது! சபாநாயகரைக் காண்பதற்காக இரண்டு மணி நேரமாய்க் காத்திருந்த பதினாயிரம் ஜனங்கள் அடங்கிய பொதுக் கூட்டம் மிகவும் உற்சாகமாயும் சந்தோஷமாயும் நடந்தது. கூட்டத்துக்குத் திண்டுக்கல் பிரபல தேசிய முஸ்லிம் ஜனாப் குலாம் தஸ்தகீர் சாஹிப் தலைமை வகித்தார். பொதுக் கூட்டம் முடிந்த பின்னர் அனைவரும் சந்தோஷமாக ஸ்ரீ குப்புசாமி நாயர் அவர்களின் வீட்டில் விருந்து நடைபெற்றது.

பின்னர், திண்டுக்கல் காங்கிரஸ் ஊழியர்களான ஸ்ரீ கணேசன், திரு முனுசாமி, மிஸ்டர் பயில்வான் ஆகியவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு அந்த ராத்திரியில் மதுரைக்குப் பிரயாணமானோம்.

அடுத்த நாள் காலையில் சபாநாயகரிடம் விடை பெற்றுக் கொண்டு, திருநெல்வேலி நண்பர்களும் நானும் குற்றாலத்துக்குப் பிரயாணப் பட்டோம்.

சபாநாயகர் வைசண்முகம், முதல் நாள் இரவு ரயில் தவறியதும் ஒரு நன்மைக்குத் தான் என்று தீர்மானித்துக் கொண்டிருந்தார். ஆறு படை வீடுகளில் ஒன்றாகிய அழகர் கோவில் என்னும் பழமுதிர் சோலையையும் தரிசனம் செய்து விட்டுச் சென்னைக்குப் பிரயாணப் படுவதாகச் சொல்லி எங்களிடம் விடைபெற்றுக் கொண்டார்.

சபாநாயகர் வைசண்முகம் பிள்ளை அவர்களைப் போன்ற பக்த சிரோமணியுடன் கூடத் தமிழ் நாட்டில் பல முக்கிய ஸ்தலங்களைத் தரிசிக்கும் பாக்கியத்தை எனக்கு அளித்த திருநெல்வேலி நண்பர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்தி விட்டுக் கல்கி நேயர்களிடம் நான் இப்போதைக்கு விடைபெற்றுக் கொள்கிறேன்.

ஹாஸ்யச் சுரங்கம்

ரா. கி.

ஒரு காலத்தில் நமது நாட்டில் கதர் என்பது உண்மையில் கதரா யிருந்தது. அதாவது உண்மையான தேசபக்தர்களும் தியாகிகளும் அணியும் ஆடையாயிருந்தது. ஆனால் உண்மையான தேசபக்தர்களும் தியாகிகளும் எந்த நாட்டிலும் அவ்வளவாக நாற் சந்தியில் இறைந்து கிடக்க மாட்டார்கள் அல்லவா? அத்தகையவர்கள் கொஞ்சம் அருமையாகத்தான் இருப்பார்கள். அவர்களைக் கண்டு பிடிப்பதும் கஷ்டமாகத்தான் இருக்கும். அதோடு அவர்களுடைய பாங்கிக் கணக்கில் அவ்வளவாக மிச்சம் அதிகம் இருக்க முடியாது. பாங்கியில் அப்படிப் பட்டவர்களுக்குக் கடனும் கொடுக்க மாட்டார்கள். அவர்களுடைய வருமானம் மேற்படி மேற்படி தான் என்று சொல்ல வேண்டியதில்லை.

எனவே, கதர்த் தொழிலின் அபிவிருத்திக்கு அப்போதெல்லாம் பிரசாரம் அதிகம் தேவையா யிருந்தது. பொதுக் கூட்டங்களில் கதரின் மகிமையைப் பற்றித் தொண்டை வலிக்கப் பேசவேண்டி யிருந்தது. கதரைப் பற்றிப் பாட்டுக்கள் பாட வேண்டியு மிருந்தது. வீதி வீதியாகச் சென்று கதர் விற்க வேண்டியதா யிருந்தது. ஏதோ சாதாரண ஜவுளிக் கடையாக்கும் என்று எண்ணிக் கதர்க் கடைக்குள் தப்பித் தவறி நுழைந்தவர்களின் தலையில் கூடுமான வரையில் கதரைக் கட்டி அனுப்ப வேண்டி யிருந்தது.

எனவே, கதர் வஸ்திராலயங்களில் வேலை பார்ப்பவர்களுக்கு அந்த நாளில் வசீகர சக்தியும் பேச்சு சாமர்த்தியமும் ரொம்ப ரொம்ப வேண்டியிருந்தது. கடைக்குள்ளே வருகிறவர்களிடம் சிரிக்கச் சிரிக்கப் பேசி, பத்து ரூபாய்க்குக் கதர் வாங்க வந்தவர்களை ஐம்பது ரூபாய்க்கு வாங்கச் செய்யும் ஆற்றல் தேவையா யிருந்தது.

இப்படிப்பட்ட வசீகர சக்தியும் பேச்சு சாமர்த்தியமும் உள்ள கதர் வஸ்திராலய மானேஜர்கள் அந்த நாளில் தென்னாட்டில் இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஸ்ரீ டி. சதாசிவம்; இன்னொருவர் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி பி.ஏ., பி.எல்.

பல வருஷங்களுக்கு முன்னால் ஒருநாள் சென்னைக் கதர் வஸ்திராலயத்துக்குப் போயிருந்தேன். புது மானேஜர் ஒருவர் வந்திருந்தார். எல்லாரிடமும் அவர் வெகு குஷியாகப் பேசிக் கொண்டிருந்தார்.

“இவர் யார்? நல்ல படிப்பாளியாகவும் அறிவாளியாகவும் காணப்படுகிறார்! அதோடு வந்தவர்களிடம் சரளமாகப் பேசுகிறார்!” என்று மனதில் எண்ணிக் கொண்டு, பிற்பாடு அவரைப் பற்றி விசாரித்தேன். அவர் பெயர் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி என்றும், பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர் என்றும் தெரிந்து கொண்டேன்.

பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றுக் கதர் விற்க வந்தாரே என்று நினைத்தபோது எனக்கே ஒரு மாதிரியாக இருந்தது. அவருடைய பெற்றோர்களுக்கு எப்படி இருந்திருக்கும்? அவருடைய வாழ்க்கைத் துணைவிக்குத்தான் எப்படி இருந்திருக்கும்? அந்த சௌபாக்கியவதியைப் பேட்டி கண்டு, “என்ன இவரை இப்படி விட்டு விட்டுச் சும்மா இருக்கிறீர்களே!” என்று சொல்லலாம் என நினைத்தேன். ஆனால் அவருக்கு இன்னும் கலியாணமே ஆகவில்லையென்று தெரிந்தது.

* * *

இதற்கிடையில் ஒரு தமிழ் வாரப் பத்திரிகையில் தற்செயலாக ஒரு கட்டுரையைப் படித்தேன். முதல் நாலு வரி படித்ததும் “இதென்ன பிரமாதமா யிருக்கிறதே?” என்று நினைத்தேன். கட்டுரையில் அவ்வளவு நகைச்சுவை கொப்புளித்துக் கொண்டிருந்தது! என்னுடைய வழக்கப்படி “இதை எழுதியவர் யார்?” என்று துப்பு விசாரித்தேன். இலேசில் தெரிந்து கொள்ள முடியவில்லை. துப்பறியும் நிபுணர்களை ஏவித்தான் கண்டு பிடிக்க வேண்டி யிருந்தது. கடைசியில் அக் கட்டுரை எழுதியவர் “நம்முடைய கதர் வஸ்திராலய மானேஜர் ஆர். பார்த்தசாரதி பி.ஏ., பி.எல்.தான்!” என்று தெரிந்தது.

உடனே ஆசாமியைப் போய்ப் பார்த்து, “என்ன சுவாமி! ஆளுக்குள்ளே ஆள், அம்மாப்பேட்டை ஆளா யிருக்கிறீரே? இவ்வளவு உயர்ந்த எழுத்துத் திறமையை ஏன் இவ்வளவு இரகசியமாக ஒளித்து வைத்திருக்கிறீர்?” என்று கேட்டேன்.

"எல்லாம் உங்களுக்குப் பயந்து கொண்டுதான். அது இருக்கட்டும். நிவ்விய மான கதர், புத்தப் புதிய ஸ்டாக், திருப் பூரிலிருந்து நேரே ரயிலில் வந்து இறங்கியிருக்கிறது! நாலு முழம் என்றால், சரியாக நாலு முழம் நீளம். நாற்பத்தெட் டரை அங்குலம் அகலம். அனைந்து வேறு மானால் காட்டுகிறேன். நல்ல கனமா யும், அழுத்தமாயும், பார்ப்பதற்கு அழகா யும், அணிவதற்கு மிருதுவாயும் இருக் கிறது. நாலுக்கான கம்பிக் கரை; உங்களுக்கு ரொம்பப் பாந்தமாயிருக்கும். ஒரு பத்து ஜோடி தள்ளிவைக்கட்டுமா?" என்றார் பார்த்தசாரதி.

"தள்ளுங்கள்; கழுத்தைப் பிடித்துத் தள்ளுங்கள்! ஆனால் நான் கேட்க வந்த விஷயம் வேறு. மேற்படி பத்திரிகையில் மேற்படி கட்டுரையை எழுதியது நீர் தானே?" என்றேன்.

"ஆமாம்; நான்தான். அதற்காக ரொம்பவும் மன்னிக்க வேணும்......சிந்க. முதல் தரமான ஷர்டிங் துணி வந்திருக் கிறது. கதர் உற்பத்தி ஆரம்பமானதி லிருந்து இவ்வளவு ஜோரான ஷர்டிங் துணி வந்ததே இல்லை. காந்தி மகாத்மா மட்டும் சட்டை போடாத விரதம் எடுத்துக்கொண் டிராவிட்டால் அவருக்கே அனுப்பி யிருப் பேன். அடுத்தபடியாக என் மனதில் உங்க ளுடைய ஞாபகம்தான் வந்தது. எத்தனை பீஸ் எடுத்து வைக்கச் சொல்லட்டும்?"

* * *

மேற்படி சம்பவம் நடந்த சில காலத் துக்கெல்லாம் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதிக்கு நான் உண்மையாகவே 'நம்ம எடிடர்' ஆகிவிட்டேன். அவர் எனக்கு உதவி ஆசிரி யரானார். அவரோ பி.ஏ பி.எல்; நானோ பட்டத்தின் எதிரி. ஆனாலும் அவர் எனக்கு உதவி ஆசிரி யரா யிருந்த காலத் தில் இலஷ்டி பரி காரத்துக்காக ஒரு தடவையாவது என் னுடன் சண்டை பிடித்ததில்லை. சண்டை பிடிக்கலா மென்று மனதிலே கூட அவர் நினைத்த தில்லையென்று சர்வ நிச்சயமாய்ச் சொல்லுவேன். மனதுக்கு மனதே சாட்சியல்லவா? அவ்வளவு உத் தமமான குணம். குணத்தைப் போலவே வேலைத் திறமையும். எத்தனை தடவை அடித்து, திருத்தி, மாற்றி எழுதும் படி சொன்னாலும் அவர் சலிப்பதில்லை. ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி அந்தக் காலத்தில் எழுதிய "அரசியல் நிருபர் சாடு"களை அரசியல் இலக்கியம் என்றே சொல்லவேண் டும். மற்றக் கட்டுரைகளும் அப்படியே.

புகழ் பெற்ற ஆங்கில ஆசிரியர் வோட் ஹவுஸின் ஆங்கில நடையில் உள்ள கொந் தளிக்கும் ஹாஸ்யம், தங்கு தடையில்லாத ஓட்டம், வாசகர்கள் எதிர்பாராத திருகு தாளங்கள், கொனஷ்டை வெடிகள்,— இவையெல்லாம் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி யின் தமிழ் நடையிலேயும் காணலாம்.

இதைக் கேளுங்கள் :— "ஜப்பானியப் படையெடுப்பைப் பற்றித் தென்னிந்தியா வில் பரபரப்பு ஒன்று ஏற்பட்டதல்லவா? அப்போது பட்டணத்து ஜனங்கள் அவசர மாகத் தங்கள் கிராமங்களை நினைத்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். வழக் கம்போல் நான் சுந்தரத்திடம் போயிருந் தேன். 'என்ன சுந்தரம்? நீ கூடப் பட்ட ணத்தை விட்டு ஓடப்போகிறாயா?' என்று விசாரித்தேன். 'நாம் ஏன் ஸார் ஓடணும்? கத்தி கையிலே இருக்கிற வரைக்கும் நமக்கு என்ன பயம்?' என்றார் சுந்தரம்."

இப்படி ஜப்பான்காரனுக்குக் கூடப் பயப் படாத கையில் கத்தி பிடித்த சூரனுகிய சுந்தரம் யார் என்று கேட்கிறீர்களா? ஸ்ரீ சுந்தரத்தின் படிப்படியான முன்னேற் றத்தைப் பற்றி ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி எழுதியிருப்பதைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள் :—



"சென்ற பத்து வருஷங்களில் எத்த னையோ ராஜ்யங்கள் விழுந்திருக்கின்றன. எத்தனையோ மன் னர்கள் முடி விழந் திருக்கின்றனர். என் தலைக் கிராப்பும், சுந்தரத்தின் தொழி லும் மட்டும் நாளுக்கு நாள் வளர்ந்து முன் னேற்றமடைந்திருக் கின்றன. 'பி. ஏ. குடுமி'யுடனே நான்

றையும்போது சுந்தரத்தின் தொழிற்சாலை 'ஸிங்கப்பூர் பார்பர் ஷாப்' என்ற திருநாமத்துடன் விளங்கிற்று. பிறகு அது 'ஸிங்கப்பூர் ஹேர் கட்டிங் ஸலூன்' என்று அவதரித்தது. சில நாளில் 'ஸிங்கப்பூர் மாடர்ன் ஹேர் கட்டிங் ஸலூன்—புரொப்ரைட்டர் சுந்தரம் பிள்ளை' என்று முன்னேற்ற மடைந்தது. பிறகு சுந்தரத்தின் எதிரிகள் சூழ்ச்சியால் ஸிங்கப்பூர் வீழ்ச்சி அடைந்தபோது 'தி மாடர்ன் ஸலூன்—புரொப்: சுந்தரம்' என்றாயிற்று. பிறகு, பட்டணத்தின் ஷகரில், பெரிய மூன்று மாடிக் கட்டிடத்திலிருந்து ஒரு மைலுக்கு அப்பால் கூடத் தெரியும்படியான எலெக்ட்ரிக் விளம்பரம், 'சுந்தரம்ஸ்' என்று ஒளி வீசிக் கண்ணைக் கவர்ந்தது.

ஆம்; சுந்தரம் தம் தொழிலில் பெரிய முதலாளியாகி விட்டார். அவர் ஆதரவில் இப்போது வேலை செய்யும் கத்திரிகளையும் கத்திகளையும் வைத்துக் கொண்டு ஒரு யுத்த 'டாக்கி' செய்துவிடலாம்.''

இப்படி எழுதக் கூடிய தமிழ் எழுத்தாளர் தமிழ் நாட்டிலேயே ஒருவர் தான் உண்டு என்று சொல்லலாம். அவர் "பாதன்," "ஸைவ்டிகன்" முதலிய புனை பெயர்களில் எழுதி வந்த ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி பி. ஏ., பி. எல். அவர்கள் தான்.

• • •

தமிழ் வசன இலக்கியத்தின் துரதிர்ஷ்டத்தால் ஸ்ரீ பார்த்தசாரதி பத்திரிகைத் தொழிலை விட்டு, அகில இந்திய ரேடியோவுக்குப் போய்ச் சேர்ந்தார். சம்பளம் அந்தஸ்து ஆகியவற்றில் உயர்ந்த நிலைமையில் இருக்கிறார். ரொம்ப சந்தோஷம். ஆனாலும் அவர் தமிழ் வசன இலக்கிய வளர்ச்சிக்குச் செய்திருக்கக் கூடிய தொண்டு வீணாய்ப் போய்விட்டதே என்று வருந்தாமலிருக்க முடியவில்லை.

ஏதோ, அவர் தமிழ் எழுத்தாளராயிருந்த சொற்ப காலத்தில் செய்த சேவையானது நிலையான உருவம் பெற வேண்டுமென்று எண்ணி, தமிழ்ப் பண்ணைக்காரர்கள் அவருடைய கட்டுரைகள் -கதைகளில் முக்கியமானவற்றைத் திரட்டி அழகிய புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். புத்தகத்துக்குப் பெயரும் "ஹாஸ்யச் காங்கம்" என்று மிகப் பொருத்தமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழ்ப்பண்ணையின் மற்றப் புத்தகங்களைக் காட்டிலும் கூட இந்த "ஹாஸ்யச்

சங்கம்" அமைப்பிலும் தோற்றத்திலும் சிறந்து கவர்ச்சிகரமாக விளங்குகிறது.

* * *

இந்த நூலுக்கு ராஜாஜி ஒரு சிறப்பான முன்னுரை அளித்திருக்கிறார். அதை ராஜாஜியின் கையெழுத்திலேயே பிளாக் செய்து சிறப்பாக அச்சிட்டிருக்கிறார்கள்.

ராஜாஜியின் அந்தரங்க அபிமானத்துக்குப் பாத்திரமானவர்களில் ஸ்ரீ ஆர் பார்த்தசாரதி ஒருவர். கதர் விற்பனையில் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி காட்டிய ஊக்கமும் திறமையும்தான் அவர் பேரில் அத்தகைய அபிமானத்தை ராஜாஜிக்கு உண்டாக்கின. தாட்சண்யத்துக்காகவே இந்த முன்னுரையை எழுதிக் கொடுப்பதாக ராஜாஜி குறிப்பிட்டிருக்கிறார். எந்தக் காரியத்திலும் சாதாரணமாக தாட்சண்யமே காட்டாதவர் ராஜாஜி என்பது பிரசித்தமான விஷயம். அவரே தாட்சண்யம் காட்ட வேண்டுமென்றால் ஸ்ரீ பார்த்தசாரதி அவருடைய அன்புக்கு எவ்வளவு பாத்திரமானவர் என்பதை அறியலாம்.

ராஜாஜியைப் போலவே ஸ்ரீ பார்த்தசாரதியிடம் அன்பு கொண்ட மற்றொரு தலைவர் நமது ரஸிகமணி டி. கே. ஸி. அவர்கள். சாதாரணமாக டி. கே. ஸி. அவர்கள் சமயம் வாய்க்கும்போதும் சமயம் வாய்க்காத போதும் பி. ஏ. பி. எல். களை வெளுவெளு என்று வெளுத்துக் கட்டுவது வழக்கம். அத்தகைய சமயங்களில், எனக்கு இரண்டொரு வார்த்தை பேச இடம் கிடைக்கும் பட்சத்தில், "தாங்களும் ஒரு பி. ஏ. பி. எல்; ராஜாஜி ஒரு பி. ஏ. பி. எல்; நீங்கள் நமது பார்த்தசாரதி பி. ஏ. பி. எல் லைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டு வைப்பேன். ரஸிகமணி அவர்கள் உடனே பி. ஏ. பி. எல். களைக் கொஞ்சம் மறந்துவிட்டு, "பார்த்தசாரதியா? அது வேறு சமாசாரம்! பார்த்தசாரதி எழுதுவதல்லவா தமிழ்? மக்களின் வாக்கில் உலாவும் உயிருள்ள தமிழ்?" என்று ஆரம்பித்து விடுவார்கள்.

* * *

மேற்படி அருமையான "ஹாஸ்யச் சங்கம்" என்னும் நூலை ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி அடியேனுக்குச் சமர்ப்பணம் செய்திருக்கிறார். மிக்க மகிழ்ச்சியோடும் நன்றியோடும் நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். முதன் முதலில் அவரை நான் எழுதத் தூண்டியதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். பத்து வருஷத்துக்கு முன்னால் நான் செய்த குற்றத்தை ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி இன்னும் ஞாபகம் வைத்துக்கொண்டிருப்பது அதிசயமான விஷயம். இந்த அதிசயக் காரணமாக, அச்சடித்த பிரதிகள் அவ்வளவையும் நானே வாங்கிக் கொண்டு விடலாமா என்று கூட யோசித்தேன். ஆனால் தமிழ்நாட்டு வாசகர்கள் எனக்குக் கெடுதல் ஒன்றும் செய்யாதபடியால், அவர்களுக்கு அத்தகைய கஷ்டத்தை உண்டு பண்ண நான் விரும்பவில்லை. முதற் பதிப்பில் பாக்கியுள்ள 999 புத்தகங்களை அவர்களுக்காக விட்டுக் கொடுத்திருக்கிறேன்.

[ஹாஸ்யச் சங்கம்; ஆசிரியர்: ரா. பார்த்தசாரதி, பி. ஏ. பி. எல். (பரதன்); பிரசுரம்: தமிழ்ப் பண்ணை, தியாகராஜ நகர்; விலை ரூ. 2—8—0.]

புதிய சந்திரோதயம்

வானத்தில் சூரிய சந்திரர்களும் கிரகங்களும் குறிப்பிட்ட கதியில் பிரயாணம் செய்து வட்டமிட்டு வந்து கொண்டிருக்கின்றன. அப்படிக்கில்லாமல் அவற்றில் ஒன்று வான வெளியில் நேரே ஒரு திசையை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டு போயே போய் விட்டால், நமக்கு எப்படியிருக்கும்? முக்கியமாக, சந்திரன் அவ்விதம் புதுத்திசைப் பிரயாணம் செய்து கொண்டு போய் விட்டால் உலகத்துக்கு எவ்வளவு பெரிய நஷ்டம்? மனித சமூகம் அதனால் எவ்வளவு துன்பம் அடையும்? "சந்திரனும் நிலவும் இல்லாத உலகமும் ஒரு உலகமா?" என்று நம்மில் பலர் உடனே மேல் உலகத்துக்குப் பிரயாணமாகவும் விரும்பலாமல்லவா?

"சந்திரோதயம்" என்னும் அழகிய பெயரையுடைய தமிழ்ப் பத்திரிகைக்கு அந்தகைய கதி நேர்ந்துவிடுமோ என்று சமீபத்தில் வதந்தி ஏற்பட்டது. புதிய "சந்திரோதயம்" புது வடிவத்துடனும் புதிய ஆசிரியருடனும் புது விலையுடனும் வெளிவந்திருக்கிறது. இதுவரை இரண்டு இதழ்கள் பிரசுரமாயிருக்கின்றன. முதல் இதழின் அட்டையை அமரகவி பாரதியாரின் திரு உருவமும், இரண்டாவது இதழின் அட்டையை மனிதகுல சிரேஷ்டர் மகாத்மாவின் திரு உருவமும் அழகு செய்து மேன்மைப் படுத்துகின்றன. புதிய "சந்திரோதயத்தின்" புது ஆசிரியர் ஸ்ரீ பி. ஸி. முத்துசாமி சிறந்த எழுத்தாளர்; பத்திரிகைத் தொழிலில் நீண்ட அனுபவமுடையவர்; எழுத்தாளர் உலகில் பலருக்கும் நண்பர். அவருடைய தமிழ் நடை ஓட்டமும் தெளிவும் சரளமும் வன்மையும் கொண்டது. அரசியலாகட்டும், இலக்கியமாகட்டும், எந்த விஷயத்தையும் ஆற்றலுடன் கையாளும் சக்தி படைத்தவர். சிறு கதைகள், தொடர் கதைகள், ஹாஸ்யக் கட்டுரைகள், ஆடல் பாடல் விமரிசனங்கள் எல்லாவற்றையும் ஒரு கை பார்த்திருக்கிறார். இத்தகைய புது ஆசிரியரைப் பெற்றுள்ள புதிய "சந்திரோதயம்" இனிமேல் தேய்பிறை என்றும் வளர்பிறை என்றும் இல்லாமல் என்றைக்கும் பூரண சந்திரோதயமாகவே ஒளியுடன் பிரகாசிக்கும் என்று நம்புகிறோம்.

விலாசம்:—சந்திரோதயம்; 20, ஹால்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை; வருட சந்தா ரூ. 6/- தனிப் பிரதி அணா மூன்று.

கண்ணாமூச்சி

"கலீல"



எந்த ஊழ்வினை அவர்களிருவருடைய வாழ்க்கையையும் பிணைத்து வைத்ததோ? இல்லையென்றால், அந்தப் பிறவிக் குருடனுக்கு அக்கட்டழகி எப்படி மனைவியாக வாய்த்திருக்க முடியும்?

கட்டழகி என்று அவளைச் சொன்னால் மட்டும் போதாது; பிச்சைக்காரியாயிருந்தாலும் அவளைத் தற்செயலாகப் பார்க்க நேரும் யாரையும் சில விநாடிகளாவது ஸ்தம்பிக்கச் செய்யும் வல்லமையிருந்தது, அவளுடைய கலை பொருந்திய முகத்துக்கு. வட்டவடிவமான கரிய விழிகளில் ஒரு சோகம் நிறைந்த பார்வை; உற்சாக மிழந்த உதடுகளில் பரிதாபமான ஒரு துடிப்பு; கோர்த்து வைத்த முத்துக்கள் போன்ற பற்களில் ஒரு ஒளி; துயரம் ததும்பும் பேச்சில் ஒரு கனிவு!

மனித நாகரிகமும் சமூகக் கோட்பாடுகளும் தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கையைச் சிதைக்கலாம்; மனச் சாந்தியை அழிக்கலாம்; இயற்கையின் வனப்பை அனுபவிக்க முடியாதபடி தடை விதிக்கலாம். சிருஷ்டியில் கடவுள் கொடுத்த அழகை மாற்றவோ அபகரிக்கவோ முடியுமா?

இந்த நிலைமையிலும் அவர்கள் வாழ்க்கையில் ஒரு சாந்தி — பூரணத்துவம் — நிலவியது. நாள்தோறும் காலை வேளையில் அவன் அவளுடைய தோளைப் பிடித்துக் கொள்ள, அவள் அவனைக் கூட்டிக் கொண்டு வீடு வீடாய்ச் சென்று பிச்சை யெடுப்பாள்; கிடைக்கும் சோற்றை ஆற்றின் கரையோரத்திலிருக்கும் மண்டபத்தில் வைத்துப் பகிர்ந்து உண்டபின் அங்கே படுத்துக் கொள்வார்கள். இதுதான் அவர்கள் வாழ்க்கை. வெளியுலகோரின் ஆடம்பர வாழ்வும் சுக போகங்களும் அவர்களைச் சற்றும் கவரவில்லை; அவற்றை அவர்கள் விரும்பவுமில்லை. இப்படியாக அவர்கள் காலம் கழிந்து வந்தது.

என்றுமில்லாதபடி ஒரு நாள் காலைப் பொழுதில் ஒரு மனிதன் அந்தப் பெண்ணுடன் பேசிக்

கொண்டிருந்தான். அவனுக்குச் சுமார் முப்பது, முப்பத்தைந்து வயதிருக்கலாம். தடித்து உயர்ந்த உருவம்; கருத்து நீண்டு முறுக்கிவிடப்பட்ட 'ஜோதா' மீசை; கிராப்புத் தலை; மேலே மெல்லிய மல் 'ஜிப்பா' அணிந்து, ஜரிகைத் துப்பட்டியும் போட்டிருந்தான். அகன்ற நெற்றியில் பாதியை ஒரு குங்குமப்பொட்டு அடைத்துக்கொண்டிருந்தது. அவன் கேட்கிறான்:

"பாவம், இப்படி எத்தனை காலைக்குப் பிச்சை எடுத்து, இந்தக் குருடனையும் உன்னையும் காப்பாத்திக்கிறே?"

"நாங்க வேறே என்ன செய்ய முடியும், சாமி! எங்க தலையெழுத்து இது!"

"ஐயோ, அதிலும் இந்த ஊரிலா? கருமிப் பயக பிச்சைக்காரர்களுக்குப் பிடி சோறுகூடப் போடமாட்டார்களே!"

அவள் மௌனமாய் இருந்தாள். அந்த மனிதன் சொல்வதின் துயரமான உண்மையை அவள் சிந்தித்துப் பார்த்தாள். முன் தினம் அவள் அக்கிரகாரத்தில் பிச்சைக்குப் போனபோது நடந்த ஒரு சம்பவம் அவள் ஞாபகத்துக்கு வந்தது. "ஏது, தினக் தவறாமல் வருவதென்று வைத்து விட்டாயோ? சனியன்! இதுதான் வேலையாய்ப் போச்சு!" என்று கடிந்து கொண்டாள் ஒரு வீட்டு அம்மணி. ஒரு நாள் அவள் திருக்கரத்தால் பிச்சை வாங்கி விட்டால், மறுநாள் பிச்சைக்காரி பணக்காரியாய்ப் போய்விடுவாள் என்று அவள் நினைத்தாளோ, என்னமோ!

இப்படியேதான் அநேக வீடுகளில்.

அம்மனிதன் மறுபடியும் பேச ஆரம்பித்தான். "இன்றைக்கு அதிக வெய்யிலாயிருக்கு, பாவம்! அந்தக் கண் தெரியாத குருடனை ஏன் வீணா அலைய வைக்கப் போறே? இந்தா, இதைக்கொண்டு ஏதாவது வாங்கிப் பசி யாத்திக்கிங்க!" என்று கூறி, தன் சட்டைப் பையிலிருந்து ஓர் அரை ரூபாய் நாணயத்தை எடுத்து நீட்டினான்.

அவள் பார்வை அந்த நாணயத்தின்மீது விழுந்தது. அவன் செய்கை அவளைப் பிரமிக்க வைத்தது.

என்ன! உண்டு மிகுந்த சோற்றில் ஒரு பிடி கொடுப்பதற்கில்லாமல் சீறி விழுந்தனர் எத்தனையோ பேர்! இன்னும் 'சாப்பாடு ஆகவில்லை', 'கை வேலையாய் இருக்கிறது', 'எல்லோரும் சாப்பிட்டாய் விட்டது'—இப்படிப்பட்ட 'சால்சாப்பு'க்களைத்தான் அவள் வீட்டுக்கு வீடு கேட்டுக்





கொண்டு வந்தான். அந்த வழக்கத்துக்கு மாறாகக் காணப்பட்ட இந்தப் பரோபகாரம் ஒரு நூதன அநுபவமாய்த்தான் இருந்தது அவனுக்கு.

வறுமையும், பசிக் கொடுமையும் அந்த நாணயத்தைப் பெற்றுக் கொள்ளும்படி உந்தின. கை தன்னை யறியாமல் அவன் பக்கமாய் அந்த நாணயத்தை ஏந்தப் படரப் பட்டது. அதே சமயத்தில் அவன் மனதில் ஏதோ ஒன்று உறுத்துவது போலிருந்தது. கண்கள் சிவந்து நீர் நிரம்பின.

"என்ன, யோசிக்கிறே! ஒன்றும் நினையாதே! இதெல்லாம் எனக்கு ஒரு பெரிசில்லே. எவ்வளவோ வருது, எவ்வளவோ போகுது! ஒங்க ரெண்டு ஆத்மா திருப்தி யடையறதுதான் எனக்குப் பெரிசு. ஊம்......வா ய்ப்பினை விடக்கூடாது, வாங்கிக்கோ......ஊம்......ஊம்!"

அவன் உள்ளங் கையில் அந்த நாணயத்தை வைத்து ஒரு அழுத்து அழுத்தி விரல்களை மூடினான் அவன். தான் 'வேண்டாம்' என்று மறுத்தால், அது அவனுடைய உள்ளத்தைப் புண்படுத்துமோ என்ற பயத்துடன் அவனும் சேர்ந்து ஒப்புக்குச் சிரித்தான், கலங்கிய கண்களுடன்.

நெடுநாள் வரை தம்மை யறியாமலே தம் உடலுக்குள் இருந்து பரவி முற்றிவிடும் கொடியதோர் வியாதியைப் போல, அவன் உணராத விதம் அவன் மனச் சாட்சியைக் கொல்லத் தந்திர மாலை அடி கோலியது!

2

காலச்சக்கரம் சுழன்றது. அந்தச் சுழற்சியின் ஒவ்வொரு அசைவிலும் உலகத் தோற்றத்தில் எவ்வளவு மாறுதல்கள்! மக்களின் நடை உடை பாவனை, மனப் போக்கு முதலியவைகளுக்கூட அவர்கள் உணராத விதம் மாறுபடுகின்றன. இந்த இயற்கை நியதியை யொட்டி, எப்படியோ அபின் கடைப் பங்காரு சாயபு — ஆம், முன்பு ஒரு நாள் தர்மம் செய்தவன் தான் — அந்தப் பிச்சைக்காரத் தம்பதிகளின் வாழ்க்கை நாடகத்தில் ஓர் இன்றியமையாத பாத்திரமாகி விட்டான்.

இப்பொழுதெல்லாம் அவன் ஊருக்குள் சென்று அடிக்கடி பிச்சை எடுப்பதில்லை. பங்காருவின் பொருளுதவியை யாதொரு கிலேசமு மின்றி ஏற்றுக் கொண்டான். "உண்மையான தரும சிந்தனையின் பேரில் தானே செய்கிறார்? அதை வாங்கிக் கொள்வதில் என்ன தப்பு?" என்று மனத்தைச் சமாதானம் செய்து கொண்டான்.

"மயிலி" — இதுதான் அவள் பெயர் — "அந்த மனிதன் இருக்கிறாரே, நமக்கு அடிக்கடி பொருளுதவி செய்து வருபவரு, அவரு மட்டும் நம்மகிட்டே ஏன் இவ்வளவு பட்சமா நடந்துக்கிறாரு?" என்று புருஷன் ஒரு நாள் கேட்டான்

"ஆமாம், பாவம்! அந்தப் புண்ணியவான் இல்லாமற் போனா இதுக்குள்ளே நம்ம கதி என்ன ஆகியிருக்குமோ!" என்று பதில் சொன்னாள் அவள்.

"புண்ணியவான்! — அவன் புண்ணியவானா!" — அவளுடைய வார்த்தையின் உண்மையை, அவள் முகத் தோற்றத்திலிருந்தே அறிய முயல்வதுபோல் விம்மித் தத்தளித்தன அவனுடைய பார்வை யிழந்த கண்கள். அச்சமயம் அவன் மனத்தில் குமுறி யெழுந்த பொறாமைச் சுழலின் வேகத்தை யாரே அறிவர்?

தான் செவ்வையாகத் தீட்டி முடிவு பெற்ற ஓவியத்தில், மனசுக்குத் தோன்றியும் கண்ணுக்குப் புலப்படாத ஒரு சிறிய — ஆயினும் ஜீவகளையைக் கொடுக்கும் குறையைப் பின் வாங்கி நின்று ஊன்றி நோக்கும் ஓர் ஓவியக்காரனைப் போலிருந்தது அக் குருடனின் பார்வை. குறை என்னவோ அற்பமானதா யிருக்கலாம். ஒரு சிறு கோடு—பின்னணியிலுள்ள மரத்தின் இலைகளில் ஒரு சோக அசைவு — நீரோட்டத்தின் மீது ஊர்ந்து செல்லும் மர்மமாருதத்தை உணர்த்தும் சிறு அலைகளை உண்டாக்க இயற்றும் நிழல்—பிரதான உருவத்தில் எத்தனையோ காத தூரங்களுக்கப்பால் சென்று லயித்திருக்கும் மனத்தின் சிந்தனை வேகத்தை புணர்த்தக் கண் விழிகளில் இயற்றும் மாயாஜாலப் புள்ளி—உதடுகளின் ஓரத்தில் தேங்கி நின்று, சென்று போன இன்பத்தை நினைத்துப் புளகிக்கும் முறுவலைக் காட்டும் ஒரு கீற்று — இவைகளில் ஏதாவது ஒன்றுதான் அந்த ஓவியத்தில் இல்லாமலிருக்கும். ஆனால் அது இல்லாவிடில் ஓவியம் உயிரற்றதாய் விடுமன்றோ? அது போலவே, தன் மனத்தில் பாய்ந்தெழுந்த சோர எண்ணத்தின் உண்மையைத் துலக்கும் அவள் முகத்தைப் பார்க்க அவன் எவ்வளவு ஏங்கினான்!

இத்தனை ஏக்கத்திலும் அவன் வெளித்தோற்றம் அமைதியாகவே யிருந்தது!

“ஆமாம், நீ சொல்றது உண்மைதான்!” என்று சொல்லிச் சும்மா இருந்தான் அவன்.

திருவிளையாடல் புரியும் பரம்பொருள் இந்தக் 'கண்ணாமூச்சி'யில் அவன் கண்களைக் கட்டியிருந்தான். எனவே ஒளிந்து விளையாடுபவர்களை அவனால் கண்டு கொள்ள முடியவில்லை.

3

சுமார் ஐந்து மைல் தூரத்திலிருந்த பக்கத்துக் கிராமத்தில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. அன்றுதான் கடைசி நாள். பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் திரளான ஜனங்கள் திருவிழாவைப் பார்க்கப் போவார்கள். தாங்களும் போய்ப் பார்த்துவிட்டு வருவதென்று பங்காரு மயிலியுடன் ஏற்பாடு செய்திருந்தான். ரஸ்தாவின் வழியாய்ப் போவதென்றால் சுற்று. குறுக்குப் பாதையில் சென்றால் தோணித் துறைக்கு நான்கே மைல்கள் தான். ஆற்றைக் கடந்ததும் ஊர். நடந்து போகிறவர்கள் இப்படித்தான் போவது வழக்கம்.

வயற் காடுகளிலும், தோப்புகளின் மத்தியிலுமாக ஊர்ந்து சென்றது அவர்கள் போன ஒற்றையடிப் பாதை. ஆள் ஆரவாரம் ஒன்றுமில்லை. எங்கும் ஏகாந்தமான அமைதி நிலவிற்று. சந்திரன் மேலெழும்பி வந்து மோன ஒளியைப் பரப்பினான். அநேகமாய் ஒருவரோடொருவர் பேசாமலே இருவரும் வழி நடந்தனர். இருவர் மனங்களும் தனித் தனி யோசனையில் ஈடுபட்டிருந்தன.

பங்காரு, தன் பக்கத்தில் நடந்து வரும் இளமையும் எழிலும் ஒருங்கே அமைந்த அழகுத் தெய்வத்தை அடிக்கடி பார்த்து உள்ளம் பூரித்தான். இடை யிடையே தான் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது, அவள் குரலில் தொனித்த இனிய கானத்தை அள்ளிப் பருகி அக மகிழ்ந்தான். கிடைத்தற் கரிய அந்த இன்பக் களஞ்சியம் தனக்கே ஏகபோக உரிமையாய்விட இருந்ததை உன்னி உன்னி இறும்பூது எய்தினான்.

மயிலியோ, தான் பங்காருவின் மனத்தில் எழுப்பி விட்ட மோகப் புயலின்



வேகத்தைக் கொஞ்சமும் அறிந்தானில்லை. தங்கள் நிலைமைக்கு இரங்கி உதவி புரிய முன்வந்த அவனை, மனதுக்குள் பூரணமாய் விசுவசித்தாள் அவள். ஏழைக்கு இரங்கும் உள்ளம் படைத்த அவனுடைய நோக்கத்துக்கு நினைப்பிலுங்கூட விகற்பம் கற்பிக்கத் தோன்றவில்லை அவளுக்கு. தன் புருஷனுக்கு மறைவில் விரும்பத் தகாத செய்கையில் ஈடுபடுவதாய் அவள் ஒரு போதும் நினைக்கவில்லை. இப்பொழுதும், தன் புருஷன் மாத்திரம் கண்ணால் பார்த்துக் களிக்கக் கூடியவனாயிருந்தால், அவன் இல்லாமல் தான் மட்டுமா திருவிழாவுக்குப் புறப்பட்டிருப்பாள்? — ஒருக்காலுமில்லை.

ஒரு வயல் வரப்பின் வழியாய் நடந்து கொண்டிருக்கும் போது மயிலியின் கால் இடறி விட்டது. கீழே விழவிருந்த சமயம் பங்காரு அவளுடைய தோளைப் பிடித்து நிறுத்தினான். அவள் தன் நிலையை அடைந்த பின்பும் அவன் ஒரு வினாடி கையை எடுக்கவில்லை. மயிலியின் மனதிற்குள் ஏதோ 'சுருக்'கென்றது. அவனை எதிர்த்து விறைத்துப் பார்த்துவிட்டாள். கையை அகற்றிக் கொண்டே, "ஏது, புதையல் எடுக்கப் பார்த்தாயே!" என்று சொல்லிச் சிரித்தான் பங்காரு. அவளும் அவனுடன் சேர்ந்து சிரித்தாள். "அவரைத் தப்பிதமாய் நினைத்து விட்டோமே! 'சீ, என்ன அற்பத்தனமானவள்' என்று எண்ணுவாரோ!" என்று உள்ளுக்குள் நொந்து கொண்டாள்.

பாதி தூரம் போயிருப்பார்கள். ஒரு தென்னந் தோப்பின் மத்தியில் பாதை நுழைந்து சென்றது. தூரத்தில் ஆட்டுக் கிடைக் காவல் புரிந்து கொண்டிருந்த இடைச் சிறுவன் உல்லாசமாய்த் தெம்மாங்கு பாடிக் கொண்டிருந்தான். அவன் இனிய குரல் இரவின் அமைதியில் மிதந்து வந்து அவர்கள் காதில் விழுந்தது. எவ்வளவு ரம்மியமாய் இருந்தது, அந்த இசை வெள்ளம்!



மாமரத்துச் சோலையிலே......ஏ-ஏ
மதியொளி பாய்ந்துவர
கோமளமாய் குயிலோசை......
கொஞ்சிவந்து ஊடவிட.

ஆற்றோரஞ் செந்தாழை......ஏ-ஏ
அரும்பவிழ்க்கும் வாசமெல்லாம்
காற்றோடே கூடிவந்து — அடி
கன்னிநம்மைச் சேருதடி!

தோப்பைக் கடந்ததும் மறுபடி வயற் பாதை. பாட்டு இப்பொழுது முன்னைவிட அதிகத் தெளிவுடன் கேட்டது:

காட்டுவழிப் பாதையிலே—உன்
கள்ளவிழிப் பார்வையிலே,
கூட்டுறவின் போதையிலே—அடி
கொள்ளையின்பம் தோணுதடி!

சீக்கிரத்திலேயே தோணித்துறை வந்து சேர்ந்தனர் இருவரும். ஓடக்காரன் இருவரையும் ஏற்றிக் கொண்டபின் ஓடம் நீர்ப்பரப்பின் மேல் மிதந்து சென்றது. ஆட்டிடையன் பாட்டு இன்னும் அவர்கள் காதுகளில் ஒலிப்பதுபோலவே இருந்தது — இல்லை! இப்பொழுது வேறு வார்த்தைகளல்லவா? அவனேதான் பாடிக் கொண்டிருக்கிறான் இன்னும். தொலைவிலிருந்து மெதுவாய்க் கனவில் கேட்பதுபோல் எழுந்தது, அந்த இசைநாதம்!

"மலையோரம் புலியிருக்கும்......ஏ-ஏ
வானத்தில் மீனிருக்கும்
அலையேறித் தோணிவிட்டால்......ஏ-ஏ
அக்கரையில் சொர்க்கமடி!"

ஆற்றைக் கடப்பது இசைக்கடலில் நீந்திச் செல்வது போலவேயிருந்தது.

கோவிலின் அருகே வந்தாயிற்று. ஆ! எத்தனை ஜனக் கூட்டம்! எத்தனை விதமான கேளிக்கைகள்! வாண வேடிக்கைகளென்ன, மேளதாளங்களென்ன! அதிலும் கடைசி நாள். திருவிழாக்களில் சுவாமி முன்னால் நின்று மனத்தை ஒருமைப் படுத்தி அஞ்சலி செய்வதெல்லாம் ஐந்து நிமிஷ நேரந்தானே? நாள் முழுவதையும் ஜனங்கள் வேடிக்கைகளில்தானே கழிப்பது வழக்கம்? நாதசுரக் கச்சேரிகள், பொய்க்கால் குதிரை, புலிவேஷம், பாவைக் கூத்து வரை சகலமும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன. ஒவ்வொன்றையும் ரசிக்கத் தக்க தனித்தனி மனப் போக்குள்ள திரளான மக்களும் அங்கே கூடியிருந்தனர்.

இந்த வேடிக்கைகள் ஒவ்வொன்றையும் பார்த்து உல்லாசமாய் நேரத்தைப் போக்கினார்கள் பங்காருவும் மயிலியும். பங்காரு வரிசையாய் இருந்த மிட்டாய்க் கடைகளில் ஒன்றில் நுழைந்து பக்ஷணங்கள் வாங்கி வந்து மயிலியை வற்புறுத்தித் தின்னச் செய்தான். அவள் முகம் மலர்ச்சியடைந்ததைக் கண்டு தானும் அளவிலா ஆனந்தமடைந்தான்.

ஓரிடத்தில் 'குடை ராட்டு' ஆடிக்கொண்டிருந்தது. உள்ளே உட்கார்ந்திருந்த ஜனங்கள் ஆனந்தத்தால் கைகொட்டி ஆர்ப்பரித்தனர். பங்காரு மயிலியின் பக்கம் திரும்பினான்.

"நீ எப்பொழுதாவது இதில் ஏறியதுண்டா?"

"இல்லை."

"இப்பொழுது ஏறிப் பார்க்கலாம்."

"இதிலா?"

"ஆம், ஏன்?"

"எதற்கு, வேண்......"

"......இல்லை, ஒரே ஒரு ஆட்டம்! ரொம்ப தமாஷாயிருக்கும்."

ஓர் இரட்டை ஆசனத்தில் இருவரும் ஏறி உட்கார்ந்து கொண்டனர். ராட்டு முதலில் மெதுவாய்ச் சுற்ற ஆரம்பித்து, வர வர அதிக வேகமாய்ச் சுற்றியது. மயிலிக்குச் சுற்றிலுமுள்ள பொருள்களையும், அந்த இடத்தையும் விட்டு வேறு ஏதோ ஓர் உலகத்துக்கு அதிவேகமாய்ப் பறந்து செல்வது போலிருந்தது!



இரவு ஒரு மணியிருக்கும். திருவிழாப் பார்த்து முடிந்தது. பல வேடிக்கைகளையும் பார்த்துத் தன்னை மறந்திருந்த மயிலியின் முகம் மிக்க மலர்ச்சியுடன் விளங்கிற்று.

"மயிலி! காலையிலே அதிகம் பேர் ஆற்றைக் கடந்து போவாங்க, இடம் கிடைக்காது. இப்பவே தோணித் துறை போயிட்டோமானா, விடியறத்துக்கு முந்தி நாம் ஊரு போய்ச் சேர்ந்துடலாம்" என்றான் பங்காரு.

அவள் இசைந்தாள்.

ஆற்றைக் கடந்து தோணித்துறை மண்டபத்தை யடைந்தபோதுதான் சுற்றித் திரிந்த அலுப்புத் தெரிந்தது. மண்டபத்தில் மனித வாடையே யில்லை. அதன் கல் தளத்தில் இருவரும் உட்கார்ந்தனர். படிக்

கட்டில் உட்கார்ந்திருந்த ஆந்தை ஒன்று ஆள் அரவத்தினால் வெருண்டு 'கிரீச்' சென்று கத்திப் பறந்தது.

4

அங்கே, ஆற்று மண்டபத்தில் தனியனாய் விடப்பட்ட மயிலியின் கணவன் தன் மனைவியின் வரவை எதிர்பார்த்திருந்தான். நேரமோ கழிகிறது. ஊருக்குள் போய் ஏதாவது சாப்பாடு கொண்டு வருவாளென்றல்லவா அவன் காத்திருந்தான்? முன்னேரத்திலேயே போனவள் இன்னும் ஏன் வரவில்லை?

பசியோ வாட்டிற்று. பக்கத்திலிருந்த ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. அந்த இரைச்சலைத் தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. அவனாக எங்கு சென்று யாரிடம் ஒரு பிடி அன்னம் பிச்சை கேட்க முடியும்? அதுவும் அந்த இரவு நேரத்தில்? நா வறண்டு தண்ணீருக்காக மன்றாடிற்று. வேறு வழியின்றி மெதுவாய் எழுந்து தடியை ஊன்றிக்கொண்டு படித் துறையை நோக்கி நடந்து சென்றான். ஒவ்வொரு படியையும் ஊன்று கோலால் நிதானித்துக் கொண்டு படிகளில் இறங்கலானான்.

ஒன்று, இரண்டு, மூன்று, அப்புறம்—'டடக்'கென்ற ஒரு பெருஞ் சத்தம் ......!

• • •

பங்காரு பற்றியிருந்த கைகளைப் 'படக்' என்று விடுவித்துக் கொண்டு மயிலி எழுந்து நின்றாள். அவள் மனத்திலே மின்னல் வேகத்துடன் தன் கணவனின் ஞாபகம் எழுந்தது. தன் கணவன்! உலகில் தன்னையன்றிப் பிறிதொரு தஞ்சமில்லாத ஏழைக் குருடன்! பங்காருவைப் பற்றித் தான் சொல்லிய சமாதானங்களையெல்லாம் களங்கமற்ற மனத்துடன் ஏற்றுக் கொண்டு தன்னை நேசித்த கணவன்!— இரவு தன் வரவை எதிர்பார்த்து எப்படித் தவித்தானோ? — இவ் வெண்ணம் திடீரென்றுதோன்றி அவள் இதயத்தைப் பிளந்தது. அவ்வளவுதான்; ஆற்றின் கரை மண்டபத்தை நோக்கி எடுத்தாள் ஓட்டம்!

பங்காரு அவளை வெறிக்கப் பார்த்துக் கொண்டு நின்றான்!

மண்டபத்தில் ஒரு மூலையில் தன் புருஷன் வைத்திருந்த மண் ஓடும், தனி மூட்டையும் கிடந்தன. ஆனால் அவன்? அவன் எங்கே?

அங்குமிங்கும் ஓடினாள். அவனைக் காணவில்லை. தன்னுடைய துணையின்றி அவன் ஓரிடமும் போக முடியாதென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அவனுக்கு என்ன நேர்ந்திருக்கக் கூடும்? யாரிடம் சென்று விசாரிப்பது? 'ஓ'வென்று அலறினாள். உரக்கக் கூவி யழைத்தாள். ஆற்றின் படிக்கட்டில் கிடந்த தன் புருஷனின் ஊன்றுகோல் அவள் கண்ணில் பட்டது. ஓடிச் சென்று சுழியிட்டுச் செல்லும் நீரோட்டத்தை உற்றுப் பார்த்தாள். படியின்மீது மோதிச் செல்லும் ஆற்று வெள்ளம் அவளைப் பார்த்துச் சிரிப்பது போல் 'கடகட' வென்று சத்த மிட்டு ஓடிற்று!



ஒருவர்:—இவனுடைய முதலாளி ரொம்ப புத்திசாலியாயிருக்க வேண்டும், ஸார்! முறுக்கு விற்பதற்குப் பல் இல்லாத கிழவனாகப் பொறுக்கி யிருக்கிறான், பாருங்கள்!

கானமும் கல்யாணமும்

ஸோமாஸ்

"இதுவரை பாடியவர் ஸ்ரீமதி ஸியாமளா" என்ற வாக்கியம் ரேடியோப் பெட்டியிலிருந்து வந்த பிறகுதான் ஸ்ரீமான் சுதர்சனத்துக்கு இந்த உலகப் பிரக்ஞை வந்தது. உடனே அதைத் தொடர்ந்து ஒரு பெருமூச்சும் வந்தது.

அன்றைய தினத்திலிருந்து ஸ்ரீமதி ஸியாமளாவின் கச்சேரி ரேடியோவில் எப்பொழுது நடந்தாலும் ஸ்ரீமான் சுதர்சனம் கேட்கத் தவறுவதில்லை.

ஸியாமளாவின் முதல் கச்சேரியே சுதர்சனத்துக்குக் கந்தர்வகானமாகத் தோன்றியது. அவளது கான இன்பத்தில் லயித்த சுதர்சனத்துக்கு அவளைக் காணவேண்டும், கண்டு பேசவேண்டும் என்னும் ஆர்வம் உண்டானதில் அதிசயம் என்ன இருக்கிறது?

சுதர்சனம் ஸியாமளாவின் கானத்தின் மேல் கொண்ட காதல், வரவர அவளிடமே கொண்ட காதலாக மாற ஆரம்பித்தது. சுதர்சனமும் ஒரு சங்கீத வித்வானாதலால் அவனுக்கு வாழ்க்கைத் துணைவியும் சங்கீதம் தெரிந்தவளாகக் கிடைத்தால், அது வாழ்க்கையிலேயே கிடைத்தற்கரிய பேறல்லவா?

சுதர்சனத்துக்கு 'மேடைப் பிராபல்யம்' இல்லைதான். ஆனாலும் என்ன? சங்கீத 'ட்யூஷன்' சொல்லித் தருவதில் அவனுக்கு 'வீட்டுப் பிராபல்யம்' இருக்கத்தான் இருந்தது. பரீக்ஷைக்குப் படிக்கும் மாணவர்கள் பரீக்ஷை நெருங்க நெருங்க அகோராத்ரம் புஸ்தகமும் கையுமாகக் கதறிவிட்டு, பரீக்ஷை முடிந்ததும் சடக்கென்று புஸ்தகத்தை வீசி யெறிந்து விடுகிறார்களல்லவா? அதே மாதிரி, சுதர்சனத்தின் சங்கீத மாணவிகளும் கல்யாண வயதை யடைந்ததும் ட்யூஷனுக்கு சடக்கென்று முற்றுப்புள்ளி வைத்து விடுவார்கள்! இப்படி யாகத்தானே சுதர்சனத்தின் வாழ்க்கை 'பழையன கழிதலும் புதியன புகுதலு' (பழைய மாணவிகள் ட்யூஷனை நிறுத்துவதும், புதிய மாணவிகள் வந்து சேருவதும்) மாகச் சென்று கொண்டிருந்தது.

மேடைக் கச்சேரியில் சுதர்சனம் பிராபல்யம் அடையவில்லையென்றால், அதற்குக் காரணம் அவன் கச்சேரிகளுக்குச் சரியான கூட்டம் சேராமற் போனதுதான். அதற்காக அவன் என்ன செய்ய முடியும்? தெருவில் போகிறவர்களை வலுக்கட்டாயமாய்த் தன் கச்சேரிக்கு அழைத்து வந்து கூட்டம் சேர்க்க முடியுமா?

ஆனாலும் ஒரேயடியாக எல்லோருமே அவனைக் கைவிட்டு விடவில்லை. யாரோ ஒரு பிரபல சங்கீத வித்வானின் சிபார்சின் பேரில் கிராமபோன் கம்பெனிக்காரர் ஒருவர் சுதர்சனத்தின் பாட்டை 'ரிகார்டு' செய்ய முன் வந்தார்.

அவ்வளவுதான்; எல்லாப் பத்திரிகைகளிலும் சுதர்சனம் பாடிய இசைத்தட்டின் விளம்பரம் அவன் படத்துடன் வெளியாயிற்று. அத்துடன் அவன் அதிர்ஷ்டம் நிற்கவில்லை; குமாரி ஸியாமளாவின் இசைத்தட்டு விளம்பரமும் அவள் படத்துடன் அவன் விளம்பரத்துக்குப் பக்கத்திலேயே வெளியாகியிருந்தது!

இதைக் கண்ட சுதர்சனத்துக்கு வேறு உணவு செல்லவில்லை; உறக்கமும் கொள்ளவில்லை. அந்த விளம்பரத்தைப் படித்துப் படித்துச் சுவைப்பதிலேயே சுதர்சனம் உணவையும் உறக்கத்தையும் கண்டான்! நாளாக ஆக, ஸியாமளாவைப் பற்றிய நினைவு இன்ப வேதனையாகப் பரிணமித்து அவனை அரித்துத் தின்ன ஆரம்பித்து விட்டது. அந்த வேதனை முன்பின் தெரியாத குமாரி ஸியாமளாவுக்குக் கடிதம் எழுதும் அளவுக்குக்கூட அவனுக்குத் தைரியத்தை அளித்து விட்டது.



"குமாரி ஸியாமளாவுக்கு,

முன்பின் அறிமுகமில்லாத ஒருவரிடமிருந்து

ஒரு யுவதிக்குக் கடிதம் எழுதினால் அது எத்தனை வியப்பையும் திகைப்பையும் உண்டு பண்ணும் என்பது எனக்குத் தெரிந்ததுதான். மன்னிக்க வேண்டும். இந்தக் குற்றத்துக்குக் காரணம் நான் அல்ல; நீதான்! உன்னுடைய கானத்தினால் என்னைப் பரவசப்படுத்தியதுடன் என் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு விட்டாய். கொள்ளைக்காரனுக்கு என்ன தண்டனை தெரியுமா? சிறையில் அடைப்பதுதானே! ஆகவே, நானும் உன்னை என் மனச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறேன்!



உன்னுடைய பாடல் இசைத்தட்டில் ஏறவில்லை என்பதை அறிந்து கிராமபோன் கம்பெனிக்கு எத்தனையோ நடை நடந்து, அவர்களைக் கட்டாயப்படுத்தி, கெஞ்சிக் கூத்தாடி உன் பாடலை ரிகார்டு எடுக்கும்படி செய்தேன். கிராமபோன் கம்பெனிக்காரன் என்னைப் பைத்தியக்காரன் என்றுகூட நினைத்திருப்பான்! அவனைப் பற்றி இனி எனக்கென்ன? எப்படியோ என் ஆசை நிறைவேறி விட்டது. விளம்பரத்தில் என்னுடைய படத்துடன் உன்னுடைய படத்துக்கும் இடம் கிடைத்துவிட்டது. இனிமேல் உன் உள்ளத்தில்தான் எனக்கு இடம் கிடைக்க வேண்டும்!

உன் அன்பன்,
சுதர்சனம்.

குறிப்பு:—இக்கடித ஆரம்பத்தில், 'என் ஆருயிரே' என்றோ, 'என் அன்பே' என்றோ அழைக்காமல், 'குமாரி சியாமளாவுக்கு' என்று அழைத்திருப்பதற்கு உன் மன்னிப்பைக் கோருகிறேன்.

இந்தக் கடிதத்துக்குப் பதிலாக மறுநாளே குமாரி சியாமளாவினிடமிருந்து சுதர்சனத்துக்கு ஒருகடிதம் வந்தது.

"அன்புள்ள.........

தங்கள் கடிதம் கிடைத்தது. என்ன ஆச்சரியமான ஒற்றுமை! தங்கள் பாட்டு இசைத் தட்டில் பதிவாக வேண்டும் என்பதற்காக நானும் கிராமபோன் கம்பெனிக்கு நடையாக நடந்து, சாகசமாகப் பேசி, 'ரிக்கார்டு' விற்பனைக்கு நான் பொறுப்பு ஏற்றுக் கொள்வதாகக் கூறி அவர்களை இணங்கச் செய்தேன்! அதையே தான் என் விஷயத்திலும் நீங்கள் செய்திருக்கிறீர்கள். இந்தப் பரஸ்பர சகாயம் நம் உள்ளத்தையும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள ஏதுவாயிருக்குமென்று நம்புகிறேன்.

தங்கள்,
குமாரி சியாமளா.

குறிப்பு:—நானும் இந்தக் கடித ஆரம்பத்தில் 'அன்புள்ள......' என்று எழுதி, அத்துடன் விட்டிருப்பதற்காகத் தங்கள் மன்னிப்பைக் கோருகிறேன்.

இதே மாதிரி மேலும் மேலும் நடந்த கடிதப் போக்குவரத்தின் காரணமாகக் குமாரி சியாமளா, வெகு சீக்கிரத்திலேயே ஸ்ரீமதி சியாமளா சுதர்சனம் ஆனாள்.

இப்பொழுதெல்லாம் "இது வரையில் பாடியவர் ஸ்ரீமதி சியாமளா!" என்ற வாக்கியம் ரேடியோவிலிருந்து வந்ததும் ஸ்ரீமான் சுதர்சனம் வேறு எங்கிருந்தோ இந்த உலகத்துக்கு வரவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. ஏனெனில், கல்யாணமான பிறகு ஸ்ரீமதி சியாமளாவின் கானம் அவரை வேறு எந்த உலகத்துக்கும் இழுத்துச் செல்வதில்லை!


பதிலுக்குப் பதில்

பெர்னாட்ஷாவின் நாடகங்களில் வழக்கமாக நடித்து வரும் 'கார்னீலியா ஓட்டிஸ் ஸ்கின்னர்' என்னும் நடிகை வெகு நாட்களுக்குப் பிறகு மீண்டும் ஷாவின் நாடகம் ஒன்றில் நடித்தாள். அந்த நடிகைக்கு பெர்னாட்ஷாவிடமிருந்து "மிகவும் அற்புதம்! பிரமாதமான வெற்றி!" என்று ஒரு தந்தி வந்தது.

அந்தத் தந்தியைப் பார்த்ததும் நடிகைக்கு உற்சாகம் தாங்கவில்லை. "இவ்வளவு புகழுக்குத் தகுதியில்லை" என்று ஷாவுக்குப் பதில் தந்தி கொடுத்தாள்.

"நாடகத்தையல்லவா நான் கூறினேன்!" என்று ஷாவிடமிருந்து இன்னொரு தந்தி வந்தது.

நடிகை மட்டும் அவரைச் சும்மா விட்டுவிடவில்லை; "நானும் அதைத்தான் சொன்னேன்!" என்று மீண்டும் ஒரு தந்தி கொடுத்தாள்!



ஏமாந்த முயல்கள்

சீனு

ஒரு காட்டில் பணக்காரக் கரடியார் ஒருவர் இருந்தார். அவருடைய வீட்டில் நீலம், மணி என்ற இரண்டு போக்கிரி முயல்கள் வேலை செய்து வந்தன.

ஒருநாள் கரடியார் வெளியே போய் விட்டு வீடு திரும்பியபொழுது, முயல்களைக் காணவில்லை. விஷயம் புரியாமல் கரடியார் திண்டாடிய பொழுது, கொல்லைப்புறப் பேச்சுக் குரல் கேட்டது. கரடியார் எட்டிப் பார்த்தார். நீலமும் மணியும் அங்கே நின்று கொண்டு ஏதோ 'குசு குசு' வென்று பேசிக்கொண்டிருந்தன. அவை பேசிக் கொண்டிருந்த வார்த்தைகள் கரடியாரின் காதில் அரைகுறையாக விழுந்தன.

ஆம், அவர் நினைத்தது சரியாய்ப் போயிற்று. இரண்டு முயல்களும் சேர்ந்து எப்படியாவது கரடியாரை ஏமாற்றி அவருடைய பணத்தைத் தட்டிக் கொண்டு போய் விடுவதற்காகத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தன.

அதைக் கேட்ட கரடியார் ஒன்றுந் தெரியாதவர்போல உள்ளே வந்துவிட்டார். ஆனால் அவருடைய மூளை மட்டும் முயல்களைத் தம் வீட்டை விட்டு விரட்டுவதற்கு வழி என்னவென்று தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தது.

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார் கரடியார். நீலமும் மணியும் உள்ளே வந்ததும், "நான் இன்று சாயங்காலம் வெளியூர் போகப் போகிறேன். திரும்பி வர சில நாட்கள் ஆகும். அது வரை என்னுடைய பணப் பெட்டியைத் தோட்டத்துக் கிணற்றில் போட்டு வைக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறேன்" என்றார்.

முயல்களுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. நீலம் மணியைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியது. மணி, "உஸ், ஜாக்கிரதை! கரடியார் கவனித்துவிடப் போகிறார்!" என்பதற்கு அறிகுறியாகத் தன் காதுகளை உயர்த்தி உஷார்ப் படுத்தியது. அன்று மாலை கரடியார் வீட்டை விட்டுச் சென்றதும், பெட்டியைத் தட்டிக் கொண்டு போய்விடலாம் என்று இரு முயல்களும் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தன.

கரடியார் தான் கூறியபடியே பெட்டியை வெகு சிரமத்துடன் தூக்கிக் கொண்டு போய்க் கிணற்றில் தள்ளிவிட்டு ஊருக்குக் கிளம்பினார். அவரை வழியனுப்பிவிட்டு, இரு திருட்டு முயல்களும் நேரே தோட்டத்தை யடைந்தன.



நீலம் கப்பரைக்குள் ஏறி உட்கார்ந்து கிணற்றுக்குள் இறங்க வேண்டும் என்றும், பிறகு பெட்டியை அதற்குள் வைக்க, மணி உயரே யிருந்து இழுத்துக் கொண்டு

விட வேண்டு மென்றும் தீர்மானமாயிற்று.

"முதலில் பெட்டியை வைத்து உயர அனுப்பிவிடு. பிறகு உன்னை இழுத்துக் கொள்கிறேன்!" என்று மணி கூறியபொழுது, நீலத்திற்கு ஒரு சந்தேகம் தோன்றியது. பெட்டியை இழுத்துக் கொண்டதும், எங்கே மணி தன்னைக் கிணற்றுக்குள்ளேயே விட்டு விட்டு ஓடி விடுமோ என்ற சந்தேகந் தான் அது! ஆனாலும் அது ஒன்றும் பேசாமல் கப்பரைக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டது.

கிணற்றில் இறங்கி, அவசர அவசரமாகப் பெட்டியைத் திறந்து பார்த்த நீலம், ஆச்சரியத்தால் அப்படியே சமைந்து போயிற்று. காரணம், பெட்டி காலியாயிருந்ததுதான்! வேண்டுமென்றே அதை வெகு சிரமத்துடன் தூக்கிக்கொண்டு வருபவர் போல் கரடியார் நடித்து, அவைகளை ஏமாற்றி விட்டார்!

ஆனாலும் "விஷயத்தைச் சொன்னால் மணி ஒருக்காலும் நம்பாது. 'தன்னை ஏமாற்றிவிட்டுப் பெட்டியை அபகரித்துக்கொள்ள நீலம் யோசிக்கிறது' என்று நினைத்துத் தன்னைக் கிணற்றுக் குள்ளேயே விட்டுவிட்டு ஓடி விட்டாலும் ஓடி விடும்" என்று நீலம் நினைத்தது.

ஆகவே, "இந்தப் பெட்டிக்குள் நாம் உட்கார்ந்து கொண்டால்தான் கிணற்றைவிட்டு வெளியேற முடியும்" என்று நீலம் தீர்மானித்தது.

பிறகு, நீலம் பெட்டிக்குள் உட்கார்ந்து கொண்டதும், சிறிது நேரத்துக்கெல்லாம் தான் மேலே இழுக்கப்படுவதை அது உணர்ந்தது.

பெட்டியை மேலே கண்டதும், மணியின் மனதில் கெட்ட எண்ணம் புகுந்து கொண்டது. நீலம் நினைத்த படியே பெட்டியைச் சுமந்து கொண்டு மணி கம்பி நீட்டியது. பாவம், அதற்குள் என்ன இருக்கிறது என்று அதற்கு அப்பொழுது எப்படித் தெரியும்?

ஓட்டமாய் ஓடிய மணி, சற்று நேரத்திற்கெல்லாம் "மணி, மணி!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தது. நீலம்தான் எப்படியோ கிணற்றிலிருந்து வெளியே வந்து, தன்னைத் துரத்திக்கொண்டு வருகிறதோ என்ற பயம் அதைப் பிடித்துக்கொண்டது. ஆனால் பின்னால் யாரையும் காணவில்லை!


பின்னும் சிறிது தூரம் சென்றதும், "மணி, மணி!" என்று மீண்டும் யாரோ கூப்பிடுவதைக் கேட்டதும், மறுபடியும் சற்று நின்று கவனித்தது.

அப்பொழுதும் அதற்குப் பின்னால் யாரையும் காணவில்லை. மணிக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. "இது என்ன அதிசயம்!" என்று அது ஒரு முறை தன்னைத் தானே இப்படியும் அப்படியுமாகச் சுற்றிப் பார்த்துக் கொண்டது. பிறகு, "இனி யார் கூப்பிட்டாலும் திரும்பிப் பார்ப்பதேயில்லை!" என்ற உறுதியுடன் அது இன்னும் வேகமாக ஓடிற்று.

இந்தச் சமயத்தில், "நான்தான், அண்ணா! பெட்டியைத் திற!" என்று பெட்டிக்குள்ளிருந்தே குரல் வரவும், மணிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. பெட்டியைக் கீழே இறக்கித் திறக்கவும், அதிலிருந்து நீலம் வெளியே தாவியது. மணி வெட்கத்தால் தலையைக் குனிந்து கொண்டது.

நீலம் விஷயத்தைக் கூறியதும், மணிக்குக் கரடியாரின்மேல் வந்த கோபத்துக்கு ஓர் அளவேயில்லை!

"நீ என்னை ஏமாற்றப் பார்த்தாய்! ஆனால் கரடியார் நம்மிருவரையும் ஏமாற்றி விட்டார்!" என்று நீலம் கூறவும், மணி தன் குற்றத்தை ஒப்புக் கொண்டது. அன்று முதல் இரு முயல்களும் பரம சாதுக்களாக மாறி விட்டன. இப்பொழுது அவை யாரையும் ஏமாற்றுவதில்லை.





காலக்ஷேபம்

ஒருவர் (கார் விட்டுக் கொண்டு வரும் நண்பரைப் பார்த்து):—நமஸ்காரம், ஸார்! எப்போது கார் விடக் கற்றுக் கொண்டீர்கள்? எத்தனை நாளில் கற்றுக் கொண்டீர்கள்?

நண்பர்:— நமஸ்காரம்! அதுவா? நாலைந்து......!

ஒருவர் (இடை மறித்து, உற்சாகத்துடன்):—நாலைந்து வாரங்களில் கற்றுக் கொண்டு விட்டீர்களா? பேஷ்!

நண்பர்:—இல்லை, இல்லை! நாலைந்து கார்களை மோதி உடைத்த பிறகு, கார் விடக் கற்றுக் கொண்டேன்!

★

எஜமானி (வேலைக்காரியைப் பார்த்துச் சந்தோஷத்துடன்):—பேஷ்! இன்றைக்கு நீ என் புடவையை ரொம்ப நன்றாய்த் தோய்த்திருக்கிறாயே!

வேலைக்காரி:—இல்லை, அம்மா! அது என் புடவை!

★

கல்யாணத் தரகர்:—மாப்பிள்ளை அப்படி ஒன்றும் அழகு, புத்திசாலி என்று நான் சொல்லமாட்டேன். அவனுக்கு ஒரு பெரிய பங்களா மட்டும் இருக்கிறது.

வரன் பார்ப்பவர்:—ஏதாவது படம் வைத்திருக்கிறீரா?

கல்யாணத் தரகர்:—ஓ, இதோ இருக்கிறதே!

வரன் பார்ப்பவர்:—நான் பையனின் போட்டோவைக் கேட்கவில்லை, ஐயா! பங்களாவின் படத்தைத்தான் கேட்டேன்!

★

கணவன்:—நேற்று செய்த கொழுக்கட்டை நன்றாயில்லை; இன்று நன்றாயிருக்கிறது. நாளைக்கும் கொஞ்சம் வைத்திருக்கிறாயா?

மனைவி:—நேற்று செய்த கொழுக்கட்டை தான் இது!

★

பயில்வான் (தன் ஐந்து வயது மகனிடம்):—டேய், பாலு! நன்றாக, கெட்டியாக, பலமாகக் கையை மூடிக் கொள்!

மனைவி:—இப்போதிருந்தே குழந்தையைக் குத்துச் சண்டைக்குப் பழக்குகிறீர்களாக்கும்!

பயில்வான்:— இல்லை யில்லை; கடைக்குப் போய் வெற்றிலைப் பாக்கு வாங்கி வரும்படி காலணா கொடுத்தேன். அதைப் பத்திரமாகப் பிடித்துக் கொள்ளத்தான் சொல்லிக் கொடுக்கிறேன்!

★

நாடகாசிரியர்:—நான் கதாநாயகன் விஷம் குடித்து இறந்ததாக எழுதி யிருக்கையில், நீங்கள் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு இறந்ததாக ஏன் மாற்றி யிருக்கிறீர்கள்?

மானேஜர்:—தூங்கி விழுந்து கொண்டே பார்க்கும் ஜனங்களை எழுப்பத்தான்!

ஒரு பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர், மாணவர்களைப் பல கேள்விகள் கேட்டார். எல்லோரும் சரியாகப் பதில் கூறினார்கள். இன்ஸ்பெக்டருக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "நான்கூடச் சிறு பையனாக மாறிப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க வேண்டும் போலிருக்கிறது!" என்றார்.

பையன்கள் யாவரும் மௌனமாக இருந்தனர். சற்று நேரம் கழித்து இன்ஸ்பெக்டர், "நான் மறுபடியும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று ஏன் சொல்லுகிறேன், தெரியுமா?" என்று கேட்டார்.

ஒரு பையன், "தெரியும், ஸார்! நீங்கள் சிறு வயதில் படித்ததை யெல்லாம் இப்போது மறந்து விட்டீர்கள். அதனால்தான் மறுபடியும் படிக்க வேண்டும் என்கிறீர்கள்!" என்றான்.

★

பெரிய மனிதர் (ரிக்ஷாக்காரனைப் பார்த்து): என்ன அப்பா, ஒரே அடியாய் ஒரு ரூபாய் கேட்கிறாயே! பஸ்ஸிலே போனால் மூன்றணாத்தானே!

ரிக்ஷாக்காரன்:—அது சரிதான்! ரிக்ஷாவிலே போனால் நல்லாக் குந்திக்கிட்டுப் போகலாம். பஸ்ஸிலே போனால் நின்னுக்கிட்டுத்தானே போவணும்?

★

சோமு:—எங்கள் ஆபீஸில் உத்தியோகத்துக்கு மனுப் போட்டிருந்தாயே, என்ன ஆயிற்று என்று தெரியுமா உனக்கு?

ராமு (கோபத்துடன்):— சொல்லாமலே தெரியுமே! எவனாவது ஒரு உபயோகமற்ற மட சாம்பிராணிக் கழுதைக்கு அந்த உத்தியோகத்தைக் கொடுத்திருப்பான்!

சோமு:—ரொம்ப சரியான பேச்சு! உனக்குத்தான் அந்த வேலையைக் கொடுத்தது. இன்றைய தபாலிலே 'ஆர்டர்' அனுப்பி யிருக்கிறார்கள்!

★

"அம்மா, நான் நல்ல பையன்தானே?"

"ஆமாண்டா, கண்ணே! சந்தேகம் என்ன?"

"என்னை நம்புவாயா, அம்மா?"

"நிச்சயம் நம்புவேண்டா, தங்கம்! உன்னை நம்பாமல் என்ன?"

"அப்படின்னா, ஏன் இன்னும் நெய்யைத் தூக்கி உசர மூடி வைக்கிறே!"

★

"எங்கள் வண்ணான் சுத்த மோசம்! கோட்டு வெளுக்கப் போட்டால் கோட்டில் இருக்கிற பித்தானை யெல்லாம் உடைத்து விட்டு அரைப் பித்தானாகக் கொண்டு வருகிறான்."

"தேவலையே! எங்கள் வீட்டுக்கு வருபவன் பித்தானே இல்லாமல் அரைக் கோட்டுத் தானே கொண்டு வருகிறான்!"



அந்தக் கிழவன் தனக்கு எதிலேயும் நம்பிக்கை யில்லை என்றுதான் சொல்லிக் கொண்டான். கடைசியில் அவனைப்போன்ற தன்னம்பிக்கையுள்ள ஆசாமி வேறு யாரும் கிடையாது என்று நிரூபித்து விட்டான்.

ஆம்; நான் சுமார் பதினைந்து வயதுச் சிறுவனாக இருந்தபோது நடந்தது இது:

தன்னந்தனியாக நான் குற்றாலத்துக்குப் போய்க் கொண்டிருந்தேன். தென்காசியிலிருந்து குற்றாலத்துக்குச் செல்லும் சாலை இருமருங்கும் மரங்கள் அடர்ந்து அழகாக இருக்கும். சாயங்கால வேளை சற்றுப் பயங்கரத்தைக்கூட அளிக்கும். அப்படிப்பட்ட வேளையில்தான் 'தனக்கு எதிலும் நம்பிக்கை யில்லை' என்று சொல்லிக் கொண்ட அந்தக் கிழவனை நான் சந்தித்தேன்.

நான் சந்தித்தபோது நடுத்தெருவில் குனிந்து அந்தக் கிழவன் ஏதோ செய்து கொண்டிருந்தான். என்ன செய்கிறான் என்று பார்த்தேன். தான் பிச்சை யெடுத்துச் சேர்த்திருந்த காசுகளை ஒரு கந்தைத் துணியில் முடிந்து அவன் உள்ளங்காலில் வைத்துக் கட்டிக் கொண்டிருந்தான். அப்புறம் 'என்ன செய்கிறான்?' என்று பார்த்தபோது, செருப்பை மாட்டிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். அப்போது, அவன் பக்கத்தில் நான் நின்று கொண்டு அவனைக் கவனித்ததை அறிந்த கிழவன், "என்ன சாமி, பார்க்கிறீக?" என்றான்.

"ஏன் அப்பா, காசைக் காலில் வைத்துக் கட்டுகிறாய்?" என்று கேட்டேன்.

"இந்தப் பக்கத்திலே யாரையுமே நம்பக் கூடாது, சாமி! களவாணிப் பயக! திருடிக் கிட்டுப் போயிடுவானுக!" என்றான்.

"இதென்னப்பா, நீ யாரையுமே நம்புவ தில்லையா!" என்றேன்.

"ஆமாம், சாமி! எனக்கு உலகத்து மேலேயே நம்பிக்கை அற்றுப் போய் எத்தனையோ வருஷம் ஆச்சு!" என்றான்.

"அதென்ன, அப்படி?"

"என்னைக்கு அந்த ராக்காயி என்னைக் கைவிட்டு விட்டாளோ — அன்னிலிருந்தே......"

"அது யாரப்பா, ராக்காயி?"

"அதெல்லாம் பெரிய கதையுங்க!"

"சும்மா சொல், நடக்கிற தூரம் தெரியாமே இருக்கும்" என்றேன்.

"அதுவும் சரிதான்! ராக்காயி யார் தெரியுமா, சாமி? அவ என் அத்தை மகள். என் அத்தையும் மாமாவும் அவ சிறு வயசிலேயே இறந்திட்டாக. அதனாலே ராக்காயி எங்க வீட்டுக்கு வந்துட்டா. அவ பார்க்கிறதுக்கு அழகாக இருப்பா என்று சொல்லுவாக ஆனால் என் கண்ணுக்கு மட்டும் அவ குரூபியாகத்தான் இருந்தாள்.

"அவளை யாராகிலும் 'எனடி, கலியாணம் பண்ணிக் கொள்கிற வயசாச்சு, புருசன் கிருசன் தேடி வைச்சிருக்கயா?' என்று கேட்டால், 'நான் எதுக்குத் தேடணும், எங்க அத்தான் இருக்கையிலே!' என்பாள் என்னைக் குறிப்பிட்டு.

"இப்படி ஒரு தடவை இரண்டு தடவை ராக்காயி சொல்லக் கேட்டுப் பொறுத்துக் கிட்டிருந்தேன். மூன்றாவது தடவை சொன்னதும் எனக்குக் கோபம் பத்திக்

கொண்டு வந்து விட்டது. எங்க ஐயாவினுடைய கைத்தடி, வீட்டுக் கதவு மூலையில் இருந்தது. எடுத்து அவளை நையப் புடைத்து விட்டேன்!

"ராக்காயிக்கு உடம்பெல்லாம் காயம். மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டாள். அந்தச் சமயம் எங்க ஐயா வீட்டுக்குள் நுழைந்தார். ராக்காயினுடைய நிலைமையைப் பார்த்தார்; என்னையும் பார்த்தார். அவர் கண்களில் தீப்பொறி பறந்தது. அந்தச் சமயம் அவர் கையில் அரிவா கிடைத்திருந்தால், அதாலேயே என்னைத் தீர்த்து விட்டிருப்பார்; கிடைக்கவில்லை. என்னைக் கண்டபடி வைது, 'வீட்டிலே காலை வைத்தால் காலை முறிச்சிடுவேன்' என்று சொல்லி என்னை வீட்டை விட்டு விரட்டிவிட்டார். நான் எங்கள் ஊரிலிருந்து பத்து மைலுக்கு அப்பாலிருக்கும் என் அக்கா வீட்டில் குடியேறினேன்.

"ராக்காயிக்கு என்னவெல்லாமோ அப்புறம் வைத்தியம் செய்தார்களாம். அவளுக்குச் சுய நினைவு வந்த உடனே, 'அத்தான் எங்கே?' என்றுதான் முதலில் விசாரித்தாளாம்! 'அத்தானைப் பற்றி இன்னும் என்ன பேச வேண்டிக்கிடக்கு?' என்றார்களாம் மற்றவர்கள். இருந்தாலும் அவ 'அத்தான்... அத்தான்!' என்றுதான் சொல்லிக்கொண்டிருந்தாளாம்.

"இதையெல்லாம் கேட்ட எனக்கும் அவள் மேல் பச்சாத்தாபம் உண்டாகி விட்டது! நம்மேல் அன்பு வைத்ததற்கும் உரிமை பாராட்டியதற்கும் நாம் இப்படித் துரோகம் செய்து விட்டோமே, அவளை அப்படிப் புடைத்து விட்டோமே என்றெல்லாம் எண்ணி வருந்தினேன். அதற்குப் பிராயச்சித்தம், அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விடுவதுதான் என்றும் தீர்மானித்தேன்.

"நான் ராக்காயியைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது என்று தீர்மானித்தவுடன் அவளைப் பார்க்க வேண்டும், அவளுடன் பேச வேண்டும் என்ற ஆவல் எனக்கு உண்டாயிற்று.

"என் அக்கா ஒரு நாள் ஆற்றில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காகத் தன் கை வளைகள், நகைகள் எல்லாவற்றையும் கழற்றிக் கடுகு டப்பாவில் போட்டு



விட்டுப் போனாள். எனக்கு ராக்காயியைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் உண்டானபோதே, சும்மா பார்க்கக் கூடாது, ஏதாகிலும் பரிசு கொடுத்து அவளிடம் நான் புதிதாகக் கொண்டிருக்கும் காதலை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் உண்டாயிருந்தது. ஆகவே, என் கண்களைக் கடுகு டப்பா உறுத்திற்று! அதிலிருந்து ஒரு தங்கச் சங்கிலியை எடுத்துக் கொண்டு பிடித்தேன், ஓட்டம்!

"நேரே ராக்காயியைப் பார்க்கச் சென்றேன். அவள் வீட்டிலில்லை; கொற்றடிக்குச் சென்றிருந்தாள். நானும் அங்கு சென்றேன். 'ராக்காயி!' என்று கூப்பிட்டேன். அவள் திரும்பிப் பார்த்து, 'அத்தான்!' என்றாள். அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பி நின்றது. 'நான் உனக்கு ரொம்ப தீங்கு செய்திட்டேன்......' என்று ஆரம்பித்தேன், மன்னிப்புக் கோரும் பாவனையில்.

"'இதெல்லாம் நீங்கலே சேர்த்தியா, அத்தான்! நான்தான் உனக்குத் தீங்கு செய்திட்டேன். மாமாதான் உன்னை வீட்டிலே காலை வைக்க விடமாட்டேன்றாகளே!' என்றாள்.

"'அதனால் என்ன, ராக்காயி! உன் மனசிலே எனக்கு இடமிருந்தால் அதுவே போதும்' என்று சொல்லிக் கொண்டே, அந்தத் தங்கச் சங்கிலியை அவளிடம் கொடுக்க வந்தேன். அவள் தன்னை நாகப் பாம்பு தீண்ட வருவதுபோல் அதைப் பார்த்தாள்......!"

* * *

இப்படி அந்தக் கிழவன் சொல்லிக் கொண்டிருந்தபோதே, நாங்கள் குற்றாலத்தை அடைந்து விட்டோம். நல்ல கும்மிருட்டு. தட்டுத் தடுமாறிக் கொண்டு அங்கிருந்த ஒரு சத்திரத்துக்குள் நுழைந்தோம். "சாமி, நாளைக் காலையிலே அருவியிலே போய்க் குளிக்கலாம். இப்ப இங்கே படுத்துத் தூங்குங்க!" என்றான் கிழவன்.

"அது சரி, அந்த ராக்காயி சமாசாரத்தைப் பாதியிலேயே நிறுத்திட்டியே, அதைச் சொல்லு!" என்றேன்.

"அந்தக் கழுதையை விட்டுத் தள்ளுங்க, சாமி!



"ஏண்டா, பையா? இப்படி விக்கி விக்கி அழறே!"

"அண்ணாவுக் கெல்லாம் வீடு விட்டிருக்காங்க; எனக்குத்தான் வீடு இல்லே..... உம்......ம்......ம்......"

"ஏன் உனக்கு மட்டும் விடுமுறை இல்லே?"

"என்னைத்தான் இன்னும் பள்ளிக்கூடத்திலேயே சேர்க்கலியே!"

அதைப் பத்தி இப்ப என்ன பேச வேண்டிக் கிடக்கு!" என்றான்.

"அவனாலே உனக்கு உலகத்தின் மேலேயே நம்பிக்கை அற்றுப் போச்சு என்றாயே, அவன் அப்படி என்ன செய்தான்?" என்றேன்.

"என்ன செய்தானா! அவ்வளவு ஆசையாக அந்தக் கழுதைக்கு நகையைக் கொண்டு போய்க் கொடுத்தால், நான்தான் அந்த நகையைத் திருடிக் கிட்டு வந்துட்டேன் என்று சொல்லிப் போலீசிலே சாட்சியம் சொன்னு எப்படியிருக்கும், சாமி! எனக்கு அவ மேலேதான் நம்பிக்கை ஏற்படுமா, அல்லது உலகத்து மேலேதான் நம்பிக்கையிருக்குமா, நீங்களே சொல்லுங்கள்!" என்று சொல்லி நிறுத்தினான்.

பிற்பகுதியை ரொம்பச் சுருக்கிவிட்டான் என்றாலும், என் மனசு ராக்காயியின் நம்பிக்கைத் துரோகத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது.

நான் பிரமித்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்த அந்தக் கிழவன், "சாமி, இங்கு திருட்டுப் பயம் ஜாஸ்தி! பண மிருந்தால் பத்திரப் படுத்தி வையுங்க!" என்றான்.

"நீதான் பணத்தைப் பத்திரப்படுத்த நல்ல வழி சொல்லிக் கொடுத்திருக்கிறாயே! அந்த மாதிரி நானும் என் பணத்தை உள்ளங்காலில் வைத்துக் கட்டி, அதற்கு மேலே செருப்பை மாட்டிக் கொண்டு தூங்குகிறேன்!" என்றேன்.

கிழவன் சிரித்துக் கொண்டே, "சாமி, உங்களிட்டே பென்சில் கின்சில் இருக்கா?" என்றான்.

"எதற்கு?" என்றேன்.

"என் அக்காக்காரிக்கு ஒரு காயிதம் எழுதிப் போடணும்!"

"நீ நகை திருடிக்கொண்டு வந்தாயே, அதே அக்காக்காரிக்கா?"

"ஆமாம் சாமி, என்னைப் பார்த்து அவ ரொம்ப இரக்கப் படுறா, பாவம்! அவளுக்கு 'நான் சுகமா யிருக்கேன்' என்று ஒரு காயிதம் போடணும்" என்றான்.

உடனே என் பையிலிருந்த பென்சிலை எடுத்துக் கொடுத்து விட்டு நான் படுத்துக் கொண்டேன். கிழவன் மினுக் மினுக் கென்று எரிந்து கொண்டிருந்த சத்திரத்து விளக்கு வெளிச்சத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். அவன் எத்தனை நேரம் எழுதிக் கொண்டிருந்தானோ தெரியாது, நான் தூங்கிப் போய் விட்டேன்.

மறு நாள் காலை நான் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட போது, நன்றாக விடிந்துவிட்டது. "அடடே, ரொம்ப நேரம் தூங்கி விட்டோமே!" என்று சொல்லிக் கொண்டே அந்தக் கிழவனைத் தேடினேன். அவனைக் காணோம்!

பரபரப்புடன் என் கால்களைப் பார்த்தேன். அணிந்திருந்த செருப்புகள் அப்படியே யிருந்தன. ஆனாலும் சந்தேகம் தீரவில்லை. காலைச் சுற்றிக் கட்டியிருந்த கைக்குட்டையை அவிழ்த்துப் பார்த்தேன். அதில் நான் வைத்திருந்த இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளுக்குப் பதிலாக ஒரு பத்து ரூபாய் நோட்டுதான் இருந்தது. அத்துடன் ஒரு கடிதமும் இருந்தது:

ஐயா,

என்னை ஒரு வழித்துணையாக நம்பியதுடன், என் ரொம்பக் காசை அவ்வளவையும் நம்பி வந்த தங்களை அநியாயமாக ஏமாற்ற எனக்கு மனமில்லை. ஆகவே, ஒரு பத்து ரூபாய் நோட்டை மட்டும் தங்கள் செலவுக்காக வைத்து விட்டுப் போகிறேன். அதற்காக எனக்குத் தாங்கள் மிகவும் நன்றி பாராட்டுவீர்களென்றும் நம்புகிறேன்.

இப்படிக்கு,
வழிப்பறி.

"என்னை மன்னிக்கவும்!"



"ஆரோக்கியத்திற்கு உட்புற சுத்தமே முதலாவது!"



காலையில் முதல் காரியம்—கைகால் கழுவுவதற்கும் முன்னால்—உட்புற சுத்தத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஆரோக்கியத்திற்கும் அழகுக்கும் அதுவே உறுதியான அஸ்திவாரம். மற்றவைகளைக் காட்டிலும் நுரையுடன் பொங்கும். ஒரு டம்ளர் ஆண்ட்ரூஸ் உங்களுக்கு உட் சுத்தத்தை அளிக்கிறது — உடலனைத்தும் உற்சாகப்படுத்தி ஊக்கமளிக்கிறது—சருமத்தை சுத்தப்படுத்துகிறது—தினசரி வியாதிகளைத் தடுக்கிறது. ஆண்ட்ரூஸ் மெதுவாகவே வேலை செய்யும். ஆனால் கச்சிதமானது—தேவையான போது ஒழுங்காக அருந்தி வாருங்கள் அது உட் சுத்தம் செய்வதை அப்போது பாருங்கள். முதலில்: ஆண்ட்ரூஸ் வாயையும் நாக்கையும் சுத்தப்படுத்தி கச்சிதமாக்குகிறது.

அடுத்தபடி ஆண்ட்ரூஸ் வயிற்றை சரிப்படுத்தி புளிப்பு நீரை திருத்துகிறது.

பிறகு: ஆண்ட்ரூஸ் ஈரல் சேர்க்கையாக பித்த உப்புசத்தைப் போக்குகிறது.


கடைசியாக: உட்புற சுத்தத்தை செய்து முடிக்க, ஆண்ட்ரூஸ் மெதுவாக வயிற்றை சுத்திகரிக்கிறது. அது அஜீரணப்படுத்தும் விஷங்களை அப்புறப்படுத்தி, மலச் சிக்கலைப் போக்கி ரத்தத்தை குணப்படுத்தி குளிர்ச்சியாக்குகிறது.

"டின்களிலும் கார்டன்களிலும் பாக் செய்யப்பட்டு எங்கும் புது ... இருக்கின்றன"

ANDREWS

ஆண்ட்ரூஸ் லிவர் ஸால்ட்

குளிர்ச்சியூட்டுகிறது — களைப்பாற்றுகிறது — ஊக்கமூட்டுகிறது



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

அவளுடைய பதில் ரமாவின் சந்தேகத்தைத் தீர்த்து விட்டது. ஆனால் அவளது சொல்லில் தொனித்த வேதனை அவனுடைய மனதை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. இந்த மூன்று மாத காலத்தில் எவ்வளவோ கையை அடக்கிச் செலவு செய்தும் அவனால் நூறு ரூபாய்க்கு மேல் மிச்சம் பிடித்து வைக்க முடியவில்லை. ஆபீஸில் உள்ள வட்டார தேவதைகளின் வாயைக் கட்டிப் போட அவன் செலவு செய்த தொகைக்குக் கணக்கு வழக்கில்லை. அப்படிச் செலவு செய்து அவர்களுடைய வாயைக் கட்டிப் போடவில்லையென்றால், அவன் உத்தியோகம் பார்த்து உருப்பட்டாற்போலத்தான்! அனைவரும் அவனை விரோதித்துக் கொண்டு வேலைக்கே உலை வைத்து விடுவார்கள்! 'இனம் காக தனியாக ஜீர்ணமாகாது' என்பதை அவன் நன்கு உணர்ந்திருந்தான். அவன் ஒரு தம்பிடி கூட வீண் செலவு செய்வதில்லை. எதாவது செலவு செய்வதென்றாலும், 'சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனை இழுப்பது' என்பார்களே, அப்படித்தான் செலவு செய்து வந்தான். "பகவான் மனது வைத்தால் இன்னும் இரண்டொரு மாதத்துக்குள் உனக்கு ஏதாவது ஒரு நகை செய்து போட்டுவிடலாம் என்றிருக்கிறேன்" என்று அவளுக்கு ஆறுதல் அளிக்கும் எண்ணத்துடன் சொன்னான்.

"எல்லோரையும் போல, நான் ஒன்றும் நகைக்காக உயிரை விடுகிறவள் இல்லை. காதிலும் மூக்கிலும் ஒன்றும் இல்லாமல் வெளியே கிளம்ப வெட்கமாயிருக்கிறது என்று சொன்னேனே தவிர......" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவள், மேலே பேசாமல் நிறுத்திவிட்டாள்.

பத்மாவின் ஒவ்வொரு சொல்லிலும் ஏமாற்றமும், மன வருத்தமும் தொனிப்பதைக் காண, ரமாநாத்துக்கு மனதை என்னவோ செய்தது. அவள் படும் இந்த வேதனைக்கு யார் பொறுப்பாளி? இந்த மூன்று மாதகாலமாக அவளிடம் நகையைப் பற்றியே பிரஸ்தாபிக்காமல் இருந்தது அவன் மேல்தானே தப்பு! அவளோ பெண்பிள்ளை; சங்கோசத்தினால் வாய் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. அவளுக்கு வார்த்தைகள் சொல்லித் தேற்றுவது அவன் கடமையல்லவா? பேசாமல் மௌனம் சாதிப்பதா, ஆண்பிள்ளைகளுக்கு அழகு? தெருவில் தினம் பொழுது விடிந்தால், பொழுது போனால் எதாவது விசேஷம் நடக்கிறது; தெருப் பெண்கள் அவளை அழைத்துப் போக வருகிறார்கள்; அவளுக்கும் ஆசை இராதா? எவ்வளவு நாள்தான் இப்படி மனதை அடக்கிக் கொண்டு அறைக்குள்ளேயே புழுங்கிக் கிடப்பாள்? சிறைக் கைதியைப் போல அவள் அந்த அறையில் எத்தனை நாள்தான் ஒண்டியாகக் கிடந்து மடிவாள்? அவனால்தானே அவளுக்கு இவ்வளவு கஷ்டமும்!

"ஆமாம், ஒரு நகைக் கடைக்குப் போய்க் கடனுக்காவது இரண்டொரு நகைகள் வாங்கி வந்து விட்டால் என்ன?" என்று ரமாநாத் ஒரு கணம் சிந்தித்தான். அவனுக்கு எத்தனையோ பெரிய கடைக்காரர்களைத் தெரியும். ஆனால் அவர்களிடம் போய் எப்படிக் கடன் கேட்பது என்றுதான்

அவனுக்குப் புரியவில்லை. அவர்கள் 'முடியாது' என்று சொல்லிவிட்டால்?—இல்லை, ஏதாவது சால்சாப்புச் சொன்னால்?—அப்புறம் அவனுடைய சொல்லுக்குத்தான் என்ன மதிப்பு?—இந்த எண்ணம் எழுந்ததும், "கடன் பேசவே கூடாது. சொன்ன தவணைப்படி நாம் பணம் கொடுக்க முடியாமல் திண்டாட வேண்டி வந்துவிட்டால், வீண் அபவாதத்துக்கும் அவமானத்துக்கும் அல்லவா ஆளாக வேண்டி வரும்! ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுத்தால் என்ன?" என்று தன் மனதை உடனே மாற்றிக்கொண்டு விட்டான்.

அடுத்த கணம் அவனுடைய மனத்தில் மற்றொரு சிந்தனை அலை எழுந்தது. "இதைப் பற்றிப் பத்மாவிடம் கேட்டால் என்ன? அவள் என்ன பதில் சொல்லுகிறாள் என்றுதான் பார்ப்போமே!" என்று எண்ணியவனாய், "உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும். கேட்கட்டுமா, வேண்டாமா?" என்று ரமாநாத் ஆரம்பித்தான்.

அப்போது பத்மாவுக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றியது. அவள் கண்களை மூடிக்கொண்டே, "எனக்குத் தூக்கம் வந்து விட்டது. காலையில் எழுந்திருந்தாக வேண்டும்" என்றாள்.

"ஏதாவது ஒரு நகைக் கடையில் சிறுகச் சிறுகப் பணம் தந்து விடுவதாகச் சொல்லி, இரண்டொரு நகைகள் வாங்கலாமா என்று யோசிக்கிறேன். உன் அபிப்பிராயம் என்ன?" என்று ரமாநாத் கேட்டான்.

பத்மாவின் மூடின கண்கள் திறந்து கொண்டுவிட்டன. என்ன தர்ம சங்கடமான பிரச்னை இது! வீட்டுக்கு வந்திருக்கும் ஒரு விருந்தாளியைப் பார்த்து, "என்ன, நீங்கள் இங்கேயே சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்பது எவ்வளவு அநாகரிகம்! விருந்தாளிக்குச் சாப்பாடு போடாமல் நாம் தட்டிக் கழிக்கப் பார்க்கிறோம் என்றுதானே அதற்கு அர்த்தம்? ரமாநாத், தானாகவே பத்மாவுக்கு இரண்டொரு நகைகளை வாங்கி வந்து கொடுத்திருக்க வேண்டுமே தவிர, அவளிடம் போய் இதைப்பற்றி ஆலோசனை கேட்டால் அவள் என்ன பதில் சொல்லுவாள், பாவம்! இவன் அவ்வளவு 'நான் பணம் கொடுத்துத்தான் வாங்கி வந்திருக்கிறேன்' என்று அவள் எவ்வளவு தடவை கேட்டாலும் அமைத்துச் சொல்லியிருக்க வேண்டும்! அவளைத் திருப்திப்படுத்துவதற்கு இதுவா சரியான வழி?

பத்மா கண்களில் அவநம்பிக்கை தாண்டவமாட ரமாவைப் பார்த்து, "நான் ஒன்றும் எனக்கு நகைகள் இல்லை என்று அழவில்லையே!" என்றாள்.

"இல்லை, அதற்காகச் சொல்லவில்லை. நகைகள் வாங்கிக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகக் கடனை அடைத்துவிட்டால் என்ன என்றுதான் கேட்டேன்!" என்று மென்று விழுங்கிக் கொண்டே சொன்னான் ரமாநாத்.

பத்மா திடமான குரலில், "நீங்கள் எனக்காகக் கடன் வாங்கத் தேவையில்லை. 'அகப்பட்டது ஆதாயம்' என்று உங்களிடமிருந்து பறித்துக் கொள்ளுவதற்கு நான் என்ன, வேசியா? என் வாழ்வும் சாவும், சுகமும் துக்கமும் உங்களோடு! ஆயுசு பூராவும் நகை போட்டுக் கொள்ளாமலே நான் இருக்கத் தயார்! எனக்காக ஒரு செல்லாக் காசுகூட நீங்கள் கடன் வாங்கக்கூடாது. பெண்கள் எல்லோரையும் நகைப் பைத்தியம் என்று எண்ணி விடாதீர்கள். ஏதோ 'எனக்கு நல்ல வரும்படி' என்று பெருமை யடித்துக் கொண்டீர்களே, அதனால் ஆசை வெட்கமறியாமல் கேட்டுவிட்டேன்.



"......இந்த நகையாசை இருக்கிறதே. இது ரொம்ப மோசம் பிடித்த வியாதி......!"

உங்களிடம் தான் பணம் மிச்சம் இருப்பதாகத் தெரியவில்லையே!" என்றாள்.

"மிச்சம் இல்லாமல் என்ன? ஆபீஸில் உள்ள பிசாசுகளைத் திருப்தி செய்யத்தான் ரொம்பவும் செலவழிக்க வேண்டியிருக்கிறது! இவ்வளவு செலவழிக்க வேண்டி வரும் என்று நான் கனவிலும் கருதவில்லை. அதனால்தான் ...."

"அப்படியானால் என்ன அவசரம்? மெதுவாகச் செய்து போட்டுக் கொண்டால் போகிறது!"

"சரி, உன் சொற்படியே செய்கிறேன். இன்னும் இரண்டு மூன்று மாதம் போகட்டும். ஆனால் முதல் முதலில் உனக்குக் கல்லிழைத்த கங்கணம் தான் செய்து போடப் போகிறேனாக்கும்!" என்றான் ரமாகாந்.

பத்மா ஆனந்த மிகுதியினால் நாத் தழுதழுக்க, "அத்தனை ரூபாய்க்கு நீங்கள் எங்கே போவீர்கள்?" என்றாள்.

"அதைப்பற்றி உனக்கு என் கவலை? உன்னை வடையைத் தின்னச் சொன்னார்களா, துளையை எண்ணச் சொன்னார்களா?" என்றான் ரமாகாந்.

பத்மாவினால் தன் மனதை அடக்க முடியவில்லை. எழுந்து அலமாரியிலிருந்து அந்தக் 'கேட்லாக்'கை எடுத்து வந்து ரமாகாந்துக்குக் காட்டலானாள். "எதிரிலேயே பொன் வைத்திருப்பது போலவும், தட்டான் வேலை செய்யக் காத்திருப்பது போலவும், 'இன்ன மாதிரி வளையல் வேண்டும்' என்று சொல்லுவதுதான் பாக்கி போலவும் எண்ணிக்கொண்டு, பத்மா வெகு பிரியத்துடன் அந்தப் புத்தகத்தைப் புரட்டினாள்.

கடைசியில் இருவருமாகச் சேர்ந்து அந்தப் புத்தகத்திலிருந்த இரண்டு விதவளையல்களைப் பொறுக்கி எடுத்தார்கள். இரண்டும் உண்மையிலேயே மிகவும் அழகாக இருந்தன. ஆனால், ரமா அதில் போட்டிருந்த விலையைப் பார்த்ததும் அப்படியே அயர்ந்து விட்டான். ஒன்றின் விலை ஆயிரம் ரூபாய்; மற்றொன்றின் விலை ஐந்நூறு!

"இந்த மாதிரியெல்லாம் நம் ஊர்த் தட்டான்களுக்குச் செய்யத் தெரியுமோ, தெரியாதோ? இருந்தாலும், நாளைக்கு எதற்கும் ஒரு நடை கடைத் தெருப் பக்கம் போய்விட்டு வருகிறேன்" என்றான் ரமாகாந்.

பத்மா புஸ்தகத்தை மூடியவாறே, கனிவு ததும்பிய குரலில், "இவ்வளவு ரூபாய் உங்களிடம் சேருவது எந்தக் காலமோ?— சரி, ஆகிறபொழுது ஆகட்டும். இங்கே நகையில்லாமல் யார் அழுகிறார்கள்?" என்றாள்.

ரமாவுக்கு இதே யோசனையில் வெகு நேரம் வரை தூக்கமே வரவில்லை. "கல்லிழைத்த கங்கணம், அவளுடைய சிவந்த கைகளுக்கு எவ்வளவு எடுப்பாயிருக்கும்!" என்ற இன்பக் கனவில் லயித்த அவன், எப்பொழுது தூங்கினானோ, தெரியாது.

— பன்னிரண்டாம் அத்தியாயம் —

மனம் மாறியது!

மறு நாள் காலையில் ரமாகாந்த், ரமேஷ் பாபுவின் வீட்டுக்குச் சென்றான். அவருடைய வீட்டிலும் கோகுலாஷ்டமி உற்சவம் நடப்பதுண்டு. அவருக்குப் பொதுவாக இதிலெல்லாம் அவ்வளவு சிரத்தை கிடையாது. இருந்தாலும், அவர் தன் மனைவியின் ஞாபகார்த்தமாக அதை விடாமல் கொண்டாடி வந்தார்.

ரமாகாந்தைக் கண்டதும் "என் அப்பா, நேற்று ராத்திரி வரவில்லை? — ஆமாம், பெரிய பெரிய பணக்காரர்கள் வீடுகளெல்லாம் இருக்கும்பொழுது இந்த ஏழை வீட்டுக்கு நீ எதற்காக வரப் போகிறாய்? சேட்ஜி வீட்டில் நேற்று அமர்க்களம் தானே?" என்று கேட்டார் ரமேஷ் பாபு.

"என்ன இருந்தாலும் உங்கள் வீடு மாதிரி வருமா? அவர் நாட்டியத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். நான் ரொம்ப நேரம் இருக்கவில்லை. விடிய விடியப் பாட்டும் நாட்டியமுமாக இருந்தது என்று கேள்விப்பட்டேன்."

"என்ன, நாட்டியத்துக்கு ஏற்பாடு செய்திருந்தாரா? இந்தத் தடவை தேவகாளிகளைக் கூப்பிடவே போவதில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தாரே. சேட்ஜி! இந்த மாதிரி முட்டாள்களின் கையில் மாட்டிக் கொண்டுதான் நம் ஹிந்து தருமம் இப்படிக் குட்டிச் சுவராகிறது. வேசிகளை நடனத்துக்குக் கூப்பிடுவதே தப்பு! அதுவும் கோகுலாஷ்டமி புண்ணிய தினத்தில்

அவர்களை டைமாட ஏற்பாடு செய்வதா? சீச்சீ, இந்த மூடங்களுக்கு எப்பொழுது தான் புத்தி வரப் போகிறதோ?"

"வேசிகளின் டைம் இல்லையென்றால், இராக் கண் விழிக்க எவன் போவான் என்று எண்ணுகிறீர்கள்? எல்லாருமே உங்களைப் போல் யோகியாகவோ, தபஸ்வியாகவோ இருக்க முடியுமா?"

"எனக்கு மட்டும் அதிகாரம் கிடைத்திருந்தால் சட்ட பூர்வமாக இந்த மடத்தனத்தை யெல்லாம் ஒழித்திருப்பேன். —உம் ... அது எப்படியாவது ஒழியட்டும். உனக்கு அவகாசம் இருந்தால் உட்காரு; ஒரு ஆட்டம் போடுவோம்!"

"அதெல்லாம் முடியாது. இன்றைக்குக் கொஞ்சம் நகைக் கடைகளுக்குப் போய் வர வேண்டும். அங்கே எனக்கு எவ்வளவோ பேரைத் தெரியும். இருந்தாலும், நீங்கள் இருந்தால் அது ஒரு விதம்தான்!"

"ஏன், ஏதாவது வாங்கப் போகிறாயா, என்ன?"

"வாங்குவதேது, மண்ணேது? விலையை விசாரித்துக் கொண்டு வரலாம் என்று எண்ணுகிறேன்."

"வீட்டில் ரொம்பவும் நச்சரிக்கிறாள் போலிருக்கிறது!"

"இல்லை, அவள் நகைப் பேச்சையே இதுவரை எடுக்கவில்லை. நான் கேட்டால் கூட 'வேண்டாம்' என்றுதான் சொல்வாள். இருந்தாலும் நாம் பேசாமல் இருக்கலாமா?"

"அப்படியானால் நல்ல வரும்படி என்று சொல்லு. இதுவரை எத்தனை ரூபாய் சேர்த்திருப்பாய்?"

"ரூபாயாவது, சேர்க்கவாவது? கடனுக்கு வாங்கித் தவணை தவணையாகக் கட்டி விடலாம் என்றிருக்கிறேன்."

"அந்த வியாபாரம்தான் வேண்டாம் என்கிறேன். கையில் பணம் சேராத வரை கடைத் தெருவில் கால் எடுத்து வைக்காதே; ரொம்பக் கஷ்டப்படுவாய்! கிழங்கள் அல்லவா சின்னப் பெண்களைக் கல்யாணம் செய்து கொண்டு வந்து, நகை செய்து போட்டு அவர்களைத் திருப்தி செய்யப் பார்க்கும்? உன்னைப் போன்றவர்களுக்கு அந்தக் கவலை எதற்கு? நீ வேண்டும் என்றால், நான் இரண்டாயிரம்—மூவாயிரத்துக்கு நகைகள் தரச் சொல்லி விடுவேன். ஆனால் கடன் வாங்குவது என்பதிருக்கிறதே, அது பெரிய தொல்லை!"

"இரண்டு மூன்று மாதத்துக்குள் நான் எல்லாப் பணத்தையும் கொடுத்துவிட முடியும் என்று எண்ணுகிறேன். இல்லாவிட்டால் இவ்வளவு தைரியமாகப் பேச வேணு?"

"அப்படியானால் இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் பொறுத்துக் கொள்ளுவதற்கென்ன? கடன் வாங்குவதைப்போன்ற கஷ்டம் இந்த உலகத்திலேயே வேறொன்றும் கிடையாது. ஒரு தடவை கடன் பட்டுவிட்டால் போதும்; அப்புறம் அந்தப் படுகுழியிலிருந்து மீண்டு வருவது என்பது முடியாத காரியம். இதேதடா இது, இவன் இப்படித் தடுத்துத் தொலைக்கிறானே என்று எண்ணாதே! உனக்கு நல்லதைத்தான் சொல்லுகிறேன். உனக்கு நல்ல வரும்படி வருகிறது என்பதை நான் அறிவேன். அதை நம்பி இப்பொழுது நீ கடன் வாங்க நினைப்பது எனக்கு அவ்வளவு சரியாகப் படவில்லை. நகையாசை என்ற இந்தத் தொத்து நோய், ஏழையான



ரஸிகர்:—என்ன பாகவதர்வாள்! இந்தக் கல்யாண 'ஸீஸன்'லே உங்களுக்கு ஏகப்பட்ட 'சான்ஸ்' கிடைக்குமே!

பாகவதர்:—உம்.... ஏதோ ஒன்று, அரை கிடைச்சுண்டு இருக்கு......

ரஸிகர்:—அது என்ன ஐயா, 'அரை'க் கணக்கு கச்சேரி?

பாகவதர்:—சிலர் கச்சேரிக்காக என்னை நிச்சயம் பண்ணி 'அட்வான்ஸ்' கொடுப்பா; பிறகு கச்சேரியை 'கான்ஸல்' செய்துவிட்டு 'அட்வான்'ஸைத் திருப்பி வாங்கிண்டு போய்விடுவா! அதைத்தான் நான் அரைக் கச்சேரியா கணக்கு வச்சுண்டு இருக்கேன்!

இந்த நாட்டை ஏன்தான் இப்படிப் பிடித்துக் கொண்டு ஆட்டுகிறதோ, தெரியவில்லை. உண்ண உணவு இன்றி வாடும் மக்களும் நகைக்காக உயிரை விடுகின்றனர். வருஷா வருஷம் கோடிக் கணக்கான ரூபாய்கள் தங்கமும் வெள்ளியும் வாங்குவதில் தொலைந்து விடுகின்றன. உலகத்தில் உள்ள வேறு எந்த நாட்டிலும் இந்தத் தங்கமும் வெள்ளியும் இவ்வளவு செலவழிவதே யில்லை. ஏன் தெரியுமா? முன்னேற்றம் அடைந்த நாடுகளில் பணம் வியாபாரத்தில் போடப்படுகிறது; மக்கள் அதில் வரும் லாபத்தைக் கொண்டு வாழ்கின்றனர், சொத்தும் விருத்தி யடைகிறது. இங்கேயோ, இருக்கும் பணத்தைச் சிங்கார சாமக்கிரியைகளில் போட்டு அழித்து விடுகிறோம். அதனால் தேசத்தின் நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் குந்தகம் விளைகிறது. புரிகிறதா? இங்கேயாவது தேவலையே! காதையும் மூக்கையும் மட்டும் குத்திக் கொள்ளுகிறார்கள். இன்னும் சில தேசங்களில் உதட்டைக்கூடக் குத்திக் கொண்டு நகை போட்டுக் கொள்ளுகிறார்களாம்!" என்றார் ரமேஷ் பாபு.

ரமாநாத் ஆவலுடன், "ஆமாம், அது எந்தத் தேசத்தில்?" என்று கேட்டான்.

"எனக்கு இப்பொழுது சரியாக நினைவில்லை. ஆப்பிரிக்காவில் என்று எண்ணுகிறேன். அவர்கள் உதட்டைக் குத்திக் கொள்ளுகிறார்கள் என்று கேள்விப்படும் பொழுது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? அதேபோலத்தான், மற்ற தேசத்தவர்களுக்கும் நாம் மூக்கையும் காதையும் குத்திக் கொள்ளுகிறோம் என்னும் விஷயத்தைக் கேட்கும்பொழுதும் இருக்கும்! இந்த நகையாசை இருக்கிறதே, இது ரொம்ப ரொம்பக் கெட்ட வியாதி! சாப்பிடக்கூடத் தோன்றாது; குழந்தை குட்டிகளுக்குக்கூடச் சரியா வயிற்றுக்குப் போடாமல் பணத்தை இந்த நகைப் பேய்க்குத்தான் அர்ப்பணம் செய்யத் தோன்றும். குழந்தைகளுக்குப் பால் கிடைத்தால் என்ன, கிடைக்கா விட்டால் என்ன? அவைகளுக்கு நெய் வாசனை தெரிந்தால் என்ன, தெரியாவிட்டால் என்ன? இதையெல்லாம் நகைப் பேய் பிடித்தவர்கள் லக்ஷியமே செய்ய மாட்டார்கள். அவர்களுடைய மனதில், 'அகமுடையாள் நகை போட்டுக் கொள்ள வேண்டும்; அகமுடையான் நகைகள் செய்து போட வேண்டும்' என்ற சிந்தனையைத் தவிர, வேறு சிந்தனையே எழாது. பத்துப் பதினைந்து ரூபாய் சம்பளத்துக்கு நாளும் போகும் எத்தனையோ கிளார்க்குகளை நான் பார்த்திருக்கிறேன். 'கிளிக் கூண்டு, புறாக் கூண்டு' என்று சொல்லும்படியான இடங்களில் குடியிருப்பார்கள்; மிருகப் பிராயமாக வாழ்க்கை நடத்துவார்கள்; அரை வயிற்றுச் சோற்றுக்குக்கூட வழி யிராது. அப்படி யிருந்தும் அவர்களுக்கும் இந்த நகைப் பித்தம் எப்படித்தான் தலைக்கேறுகிறதோ, தெரியவில்லை. வாயைக் கட்டி, வயிற்றை ஒடுக்கி இந்த நகை யாசையில் விழுந்து தங்கள் வாழ்க்கையையே குட்டிச் சுவராக்கிக் கொண்டு விடுகிறார்கள்!' என்று ரமேஷ் பாபு ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து தீர்த்துவிட்டார்.

"எனக்குத் தெரிந்த வரையில் பெண்கள் நகை செய்து போட்டுக் கொள்ளாத தேசம் ஒன்றுகூட இருப்பதாகத் தோன்றவில்லையே! ஆனால் ஐரோப்பாவில் இந்த நகைப் பழக்கமே யில்லையோ?" என்று கேட்டான் ரமாநாத்.

"இந்தத் தரித்திரம் பிடித்த உன்னுடைய நாட்டை ஐரோப்பாவுக்கு ஈடு கட்டப் பார்க்கிறாயே. உன் மூளையை என்னவென்று சொல்லுவது? அங்கிருப்பவர்களோ கொழுத்தபணக்காரர்கள். அவர்கள் பணத்தை வாரி வீசுகிறார்கள் என்றால் நாமும் அப்படிச் செய்ய வேண்டும் என்று எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது? ஏழைகளாகிற நம்முடைய காசு இப்படியா கரியாக வேண்டும்?" என்றார் ரமேஷ் பாபு.

பேச்சு சுவாரஸ்யத்தில் அவர் சதுரங்கத்தையே அடியோடு மறந்து விட்டார். அதற்குள் இரண்டு நண்பர்கள் அவரைப் பார்க்க வந்து விடவே, ரமாநாத் மெதுவாக அங்கிருந்து நழுவி விட்டான்.


அவருடன் வாதாடியதன் பயனாகக் கடனாக நகை வாங்கிப் போடுவது நல்லதல்ல என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டான். 'சொன்னால் சொன்ன தவணைப்படி கடனைத் தீர்க்க முடியாமல் போய்விட்டால் அவமானப்பட வேண்டி வருமே' என்ற பயம் அவன் உள்ளத்தைப் பிடித்தது. ஆகையால் கடைத் தெரு வரை போய்வரவேண்டுமென்றிருந்த அவனுக்கு, அந்தப் பக்கம் செல்லவே துணிவு ஏற்படவில்லை. 'இன்னும் இரண்டு மூன்று மாதத்துக்கு நகைப் பேச்சையே எடுப்பதில்லை' என்ற நிர்மாணத்துடன் அவன் வீட்டை யடைந்தான்.

(தொடரும்)

அடர்த்தியான கூந்தல்

வளர்ச்சி ஒன்றுதான்—எந்த தேசத்துக் கவிகளும், சைத்ரிகர்களும் வர்ணிப்பதுபோல—ஸ்த்ரீகளுக்குச் சிறந்த அணிகலமாகும். கார்முகிலிலிருந்து வெளிப்படும் வெண்மதியோடு கற்றைக் கரும் குழலின் உன்னத வளர்ச்சியோடு விளங்கும் ஸ்த்ரீகளின் முகத்தைக் கவிகள் ஒப்பிட்டு வர்ணிக்கின்றனர்.............................

ஜாப்கோ ஹேர் க்ரோயர்



ஜயபாரதம் கோ.,

மதராஸ் — பெங்களூர் — எர்ணாகுளம்

கைத்தறி ஆடைகளை


ஆதரியுங்கள்

மங்கையர் இன்றைய நாகரீகத்தில் விரும்பும் சாயத்திற்கு கியாரண்டியுள்ள எங்கள்

"போட்டோ மார்க்"

சேலைகளே

முதன்மை ஸ்தானம் பெற்றது



— தயாரிப்பவர்கள் —


ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி

(எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்)

Ad. No. 7

No. 1.



பத்தே நிமிஷத்திற்குள்
Saridon
ANALGESIC TABLETS
10
ஸாரிடோன்
எல்லா வலியையும் நிறுத்துகிறது

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI ஜூன் 15, 1947 4 அணா

REGD. No. M. 4392

License No. 18
Licensed to post without prepayment



[illegible]: 142, [illegible] ரோடு ஸ்ட்ரீட், போர்ட். இலங்கை [illegible]:
மெஸ்ஸர்ஸ். [illegible] & கோ., லிட்., 93, [illegible] தெரு, கொழும்பு